கோகுலம்

குழந்தைகள் பத்திரிகை

15-9-1974

50 காசு





ஒளித்துறையிலே புதிய தோற்றம்

பிலிப்ஸ் TLF ரிஃப்ளெக்டாலைட்

ரிஃப்ளெக்டாலைட் என்பது ஒளித்துறையில் ஒரு புதிய கண்டுபிடிப்பாகும். கண்ணாடி இணைந்த ஒரு ட்யூப் லைட். இதுவரை நீங்கள் கண்ட பலவற்றிலும் சிறந்தது. இதன் மேல்-பாகம் உட்புறத்தில் கண்ணாடியைப்போன்று உருவாக்கப்படுகிறது. விளைவாக, ஒளிக்கிரணங்கள் மேல் நோக்கிச் சென்று வீணாவதற்கு பதிலாக, கீழ் நோக்கிப் பிரதிபலிக்கப்பட்டு வேண்டிய இடத்தில் அதிக ஒளி கிடைக்கிறது. தவிர, மற்ற லாம்புகளைப்போல் இது புழுதியினால் பாதிக்கப்படுவதில்லை. அதாவது, குறைந்த சிலவிலே நேர்த்தியான, நிறைந்த ஒளி கிடைக்கிறது. இச்சிறப்புகளின் காரணமாக, பிலிப்ஸ் TLF ரிஃப்ளெக்டாலைட் உங்கள் சிலவைக் குறைக்க வழி செய்வதோடு, மின்சார நெருக்கடியையும் சமாளிக்க உதவுகிறது.

இன்றே ரிஃப்ளெக்டாலைட் பொருத்துங்கள். உங்கள் வீடு, அலுவலகம், கடை, தொழிற்கூடம் எங்கும் புதிய ஒளி வீசச் செய்யுங்கள்.

பிலிப்ஸ்

பிலிப்ஸ் இந்தியா லிமிடெட்

PHL. 7288



உயிர்களிடத்து அன்பு
வேண்டும் - தெய்வம்
உண்மை யென்று
தானறிதல் வேண்டும்
— பாரதியார்

■

கோகுலம்

மலர் 3 □ இதழ் 10

செப்டம்பர் 15, 1974

ஆனந்த, ஆவணி, 30

■

சந்தா விவரம்:

உள் நாடு:

ஒரு வருடம்	ரூ. 13-00
ஆறு மாதம்	ரூ. 6-50

வெளி நாடுகள்:

ஆண்டுச் சந்தா	ரூ. 25-00

மானேஜர்:
கோகுலம்
கல்கிப் பூங்கா, சென்னை-600031




அட்டையில்:

கண்ணுக்குள்ளே மின்னுமந்த
எண்ணம் என்னவோ?
காவலுக்குத்தன் கடமை என்னும்
எண்ணம் அல்லவோ?

வண்ணப்படம்:
காந்திலால் கதி





பிள்ளையார் பெருமை

திருமுருக கிருபானந்தவாரியார்

உடுண்டி விநாயகர்

கைவர்த்தம் என்னும் நாட்டில் பன்மகம் என்னும் பட்டினத்தில் பிரமாசுரன் என்னும் ஓர் அசுரன் இருந்தான். இவன் சிவபெருமானை வேண்டி நெடுந்தவம் புரிந்தான். சிவபெருமான் அவனுக்குக் காட்சி தந்தார். "உனக்கு என்ன வரம் வேண்டும், கேள்!" என்றார்.

"பிரமாசுரன் யார் தலையில் என் கையை வைத்தாலும் அவர்கள் எரிந்து போக வேண்டும்" என்னும் வரம் கேட்டான். சிவமூர்த்தி அந்த வரத்தை வழங்கினார். அசுரன் அந்த வரம் பலிக்கின்றதா என்று பரீட்சிக்கும் பொருட்டுப் பரமசிவன் தலை மீதில் கை வைக்க முயன்றான். சிவபெருமான் நாம் கொடுத்த வரத்தை நாமே அழிக்கக் கூடாது என்று மறைந்துவிட்டார். அவன் உலகங்களை நடுங்க வைத்தான்.

திருமால் அழகின் சிகரம் போன்ற மோகினி வடிவுடன் வந்தார். பிரமாசுரன் மோகினியைக் கண்டு காமுற்றான். தன்னை மருவுமாறு அவளை வேண்டினான். மோகினி, "நீரும் என்னைப் போல் நடனமாடினால் உம்மை மருவுவேன்" என்றாள். அவன் மோகக் கடலில் மூழ்கியிருந்தான். ஆதலின் சரி என்றான். மோகினி ஒவ்வோர் அபிநயமாகப் பிடித்து வந்தாள். அவனும் அந்த அபிநயங்களைப் பிடித்தான். மோகினி தன் கையைத் தலையில் வைத்து அபிநயம் பிடித்தாள். பிரமாசுரனும் தன் கையைத் தலையில் வைத்தான். பற்றி எரிந்து போனான்.

திருமால் வைகுண்டம் போனார். பிரமாசுரனுடைய மகன் துராசதன் தன் தந்தை மாண்டதை அறிந்து துக்கப்பட்டான். சுக்ரரிடம் உபதேசம் பெற்றுச் சிவபெருமானைக் குறித்துப் பெருந் தவஞ் செய்தான். ஆயிரம் ஆண்டுகளுக்குப்பின் கண்ணுதற் கடவுள் காட்சி தந்தார். "தேவ தேவா! தேவரையும் மூவரையும் அடக்கியாளுமாறும், எனக்கு என்றும் அழியா வரமும் தந்தருள வேண்டும்" என்றான். சிவபெருமான், "உன்னை யாராலும் வெல்ல முடியாது. அழியாவரம் தந்தேன். கணேசருடைய திருவடிக்கு அடங்குவாய்" என்று வரம் அளித்தார்.

துராசதன் வரபலத்தால் மதங்கொண்டு நிலவுலகத்தை வென்றான். பிரம்மாவையும் இந்திரனையும் வென்றான். அவர்கள் அஞ்சிக் காசிப்பதியை அடைந்து விசுவநாதரிடம் அடைக்கலம் புகுந்தார்கள். இந்திர புரியிலும், பிரம்ம லோகத்திலும் வைகுண்டத்திலும் ஒவ்வோர் அரக்கனை அமர்த்தி ஆளுமாறு செய்தான்.

தனது நகரத்துக்கு வந்து அரியணை மீது அமர்ந்து வெற்றி விழாக் கொண்டாடினான். "அமைச்சர்களே! எல்லா நகரங்களும் நமது ஆட்சிக்கு உட்பட்டுவிட்டன" என்றான்.

அமைச்சர்கள் "காசிமா நகரத்தில் விசுவநாதர் விளங்குகின்றார். மாலயனாதி வானவர்கள் அங்கேதான் போய் உள்ளார்கள். காசிப்பதி மட்டும் நம் ஆட்சிக்கு உட்படவில்லை" என்றார்கள்.

துராசதன் படையுடன் காசித் தலத்தை அடைந்தான். விசுவநாதர் அவனுக்குத் தந்த வரத்தை நினைத்து அவனுக்கு இன்னும் முடிவு காலம் வரவில்லை என்று எண்ணி தேவர்களுடன் கேதாரம் போய்விட்டார். துராசதன் காசியில் தேவர்களைக் காணாது எள்ளி நகையாடினான். எங்கும் அவனுடைய கொடுமை கோர தாண்டவம் செய்தது.

பிரமாதி தேவர்கள் பார்வதியம்மையிடம் முறையிட்டார்கள். அப்போது உமையின் திருமுகத்திலிருந்து கோடி சூரியப் பிரகாசமாக வக்ரதுண்டவிநாயகர் உதித்தருளினார்.

எல்லோரும் விநாயகரைப் போற்றினார்கள். வக்ரதுண்ட விநாயகர் துராசதனை அழிக்கத் திருவுளங் கொண்டார். துராசதனுடன் போர் புரிந்தார். துராசதன் பலப் பல ஆயுதங்களை விடுத்தான். அவைகளை விநாயகர் அழித்தார். விநாயகர் விசுவரூபம் எடுத்து, அவன் அழியாவரம் பெற்றிருப்பதனால் தமது திருவடியை அவன் தலையில் வைத்து, "துராசதனே! நீ அழியா வரம் பெற்றிருப்பதனால் இக்காசியம்பதியில் மேற்கு வாசலில் நம் திருவடியின் கீழிருந்து, இவ்விடத்தில் தீமை செய்கின்றவர்களை அடக்கிக் கொண்டிருப்பாயாக" என்று கூறியருள் செய்தார்.

விநாயகருடைய ஞானமேயாய் திருவடி தலையில் வைக்கப் பெற்றதனால் பந்தங்களிலிருந்து நீங்கி, மற்றவர்களுடைய தீமைகளைப் போக்கிக்கொண்டிருக்கும் பெருவாழ்வு பெற்றான் துராசதன்.

சிவபெருமான் விசாலாட்சியுடன் காசிக்கு எழுந்தருளினார். உடுண்டி விநாயகரை மூவரும் தேவரும் ஏவரும் வழிபட்டார்கள்.



மின்னலிடையாள்!


உலகத்தின் அழகெல்லாம் ஒருங்கே அமைந்த மின்னற்கொடியாள் தன் கொடி போன்ற இடையை அசைத்து மலர் பறிக்கிறாள். அப்பொழுது பேர் எழில் உருவம் ஒன்று அவள் பின்னால் நிற்பது நிழலாகத் தெரிகிறது. வெட்க மடைந்த அவளோ வேகமாக ஓடு கிறாள். அவள்மேல் காதல் கொண்ட வனோ அவள் மறைந்துவிட்டதால் அவளை எப்படியும் அடைய வேண்டும் என்று தவிக்கிறான். அவன் வேறு யாரு மல்ல; நாகலோகமெல்லாம் சென்று வந்த அருச்சுனன்தான் விண்ணுலகின் அழகையும் காண வந்திருக்கிறான்.

பயந்து கொண்டு புள்ளி மான் போல் துள்ளி ஓடும் மின்னற்கொடியா ளும் தன்னைப் பின்தொடர்ந்து வரு கிறானா என்று ஓரக் கண்ணால் பார்க் கிறாள். அப்போது அநேகவிதமான ரத்தினங்கள் இழைத்த தங்க ஒட்டி யாணம் பளபளவென்று கண்ணைப் பறிக் கிறது. இதுவே மின்னல். அந்தப் பிரகாசத்தினால் அவள் இருக்கும் இடம் தெரிந்துவிட்டதாக எண்ணி வெகு வேக மாகத் தன் இரதத்தைக் கிளப்புகிறான்

[மழை, இடி, மின்னல் போட்டிக்கு நிறை யக் கதைகள் வந்திருந்தன. ஆனால் எதுவுமே பரிசுக்கு ஏற்றதாக இல்லை. வீட்டில் பெரிய வர்களுக்குக் கதை தெரியவில்லையோ அல் லது கதை சொல்லும் கலைதான் அவர்களுக்கு மறந்து போய் விட்டதோ! வந்திருந்த கதை களுள் இந்தக் தேர்ந்தெடுத்து ஒவ்வொரு கதைக்கும் ரூ. 15/- பரிசு தர முடிவு செய் துள்ளோம். —ஆசிரியர்]

பூதகனும் குளிகையும்

பூதகன் என்ற ஒரு சோம்பேறி ஒரு யோகியி டம் சென்றான். மழை, இடி, மின்னல் எப்படி உண்டாகிறது; இந்த வானம் எப்படித் தூணே இல் லாமல் தாங்கப்படுகிறது என்று கேட்டான். யோகி புன்னகை செய்து கொண்டே அவனிடம் திருவோட் டைக் கொடுத்து "இன்னைக்கு நீ போய் யாரை யாவது நன்றாகத் திட்டி விட்டு அவர்களிடம் பிச்சை வாங்கி வா" என்று கூறினார். பூதகனும் பக்கத்தி லிருந்த ஊருக்குப் பிச்சை வாங்கச் சென் றான். திட்டினால் பிச்சையா போடுவார்கள்? பூதகனை அடித்து அனுப்பினார்கள். ஆனால் ஒரு வீட்டில் இருந்த பெண்மணி மட்டும், பூதகன் திட்டியதைப் பொருட்படுத்தாமல் "அப்பா, நீ பாவம் என்ன செய்வாய்? உன் பசிக் கொடுமை அப்படிப் பேச வைக்கிறது" என்று கூறிக் கொஞ்சம் அரிசியும் போட்டாள். பூதகன் அந்தப் பெண்மணியை வாழ்த்திக் கொண்டே சாமியாரிடம் சென்று நடந் ததைக் கூறி அந்தத் திருவோட்டையும், அரிசியையும் கொடுத்தான். யோகி புன்னகை செய்து, "மகனே! இதுபோன்ற ஒரு சில நல்லவர்கள்தான் இந்த வானத்தைத் தாங்கும் தூண் போன்றவர்கள். அதனால் வானம் என்ற கூரை கீழே விழா மல் அப்படியே நிற்கிறது. மழை இடி, மின்னலைப் பற்றிக் கேட்டாயல்லவா? இந்தக் குளிகையை வாயில் அடக்கிக் கொண்டு வடக்குப் பக்கம் சென்றால் மிகப் பெரிய குகை வரும். அதில் போய் யாருக்கும் தெரியாமல் அங்கே நடப்பதைப் பார்த்துவிட்டு வா" என்று கூறிப் பூதகனை அனுப்பினார். பூதகனும் யோகி சொன்னபடியே சென்றான். குகையும் தென்பட்டது. அதன் உள்ளே சென்று ஒரு மூலையில் இருந்த கல்லின் பின்னால் ஒளிந்து கொண்டான். சிறிது நேரத்தில் பயங்கரமான மலைபோன்ற உருவம் உடைய இருவர் உள்ளே வந் தனர். ஒருவன் பனியைப் போன்ற நிறமுடையவனாக இருந்தான். மற்றவன் வெளிச்சம் போன்று இருந் தான். பனி போன்றிருந்தவன் பூமியை ஓர் உதை உதைத்தான். உடனே நீர் பீறி அடித்தது. பீறி அடித்த நீரை அவன் குடிக்க ஆரம்பித்தான். வெகு நேரம் கழித்து நீர் வருவது நின்று விட்டது. அவ னுடைய வயிறும் நிறைந்தது. வெளிச்சமாக இருந்த வன் கூரிய ஒளிக் கிரணங்களை உறிஞ்சிக் கொண்டான். பிறகு இருவரும் பேசிக் கொண்டும், சிரித்துக் கொண்டும் இருந்தனர். திடீரென்று எங்கிருந்தோ கொஞ்சம் புகை உள்ளே வந்தது. திடீரென்று இருவரும் கோபமாக ஒருவரை ஒருவர் முறைத்துக் கொண்டனர். பிறகு இருவரும் அடித் துக் கொண்டே வானத்தை நோக்கிச் சென்றனர். அவர்களுடைய பூத உடல்கள் குகையிலேயே மறைந்து விட்டன. வெளிச்ச அரக்கன் பனி அரக்கனை அடித்தபோது எங்கும் நீராகக் கொட்டியது. பனி அரக்கன் வெளிச்ச அரக்கனை அடித்தபோது எங்கும் மின்னலாக வெளிச்சம் பரவியது. அவன் அடித்த அடிகள் ஒவ்வொன்றும் இடியாக ஒலித்தது. இவ்



விஜயன். மறுபடியும் அவள் மறைந்து விடவே சோர்ந்துபோய்ப் பெருமூச்சு விடுகிறான். அந்த ஆரணங்கை அடைவோமா என்று அரற்றுகிறான். அவன் மூச்சுக் காற்றினால் மரம், செடி கொடிகளெல்லாம் நடுங்குகின்றன. இதுவே பேய்க் காற்று.

ஏமாற்றம் அடைந்த அர்ஜுனன் அசுர வேகத்தில் ரத்தின ஹாரங்களின் 'பளிச் பளிச்' என்ற மின்னல் காணும் இடங்களிலெல்லாம் இரதத்தை வெகு வேகமாகச் செலுத்துகிறான். மலைகளிலும் பாறைகளிலும் மோதி அண்ட சராசரமே நடுங்கும்படி 'டமார் டமார்' என்ற ஓசை எதிரொலிக்கிறது.

இதுவே இடி. இரதம் ஓடிய அதிர்ச்சியினால் மலைகளும் நொறுங்கிச் சிதறி விழ, அங்கு ஓடும் ஓடை தன் மேல் விழுந்த அந்தக் கற்களின் அதிர்ச்சியைத் தாங்காமல் கரை உடைந்து தண்ணீர் நாலா பக்கமும் வழிகிறது. இதுவே மழை.

இனிமேலும் இதைத் தொடர்ந்து விடக் கூடாது என்று எண்ணிய மூக்காலமும் உணர்ந்த கோபாலகிருஷ்ணன் 'அர்ஜுனா அர்ஜுனா' என்று கத்துகிறான்.

மகுடி கேட்ட நாகம் போல் அவர் குரலில் மயங்கி அர்ஜுனனும் அமைதியடைகிறான்.

இப்போதும் வீட்டில் பெரியவர்கள் இடி இடிக்கும்போது அர்ஜுனா, அர்ஜுனா என்று கூறிக் காதை மூடிக் கொள்வது வழக்கம். **—ஆர். லக்ஷ்மி ரமணி**

ளையும்பார்த்த பூதுகன் வேணோரிடம் ஓடினான். அவளைக் கண்டு வணங்கி நடந்தவற்றைக் கூறிக் குளிகையை அவரிடம் கொடுத்தான். வேணோர் பூதுகனை நோக்கி "மகனே! பனி போன்றிருந்தவள் தான் மழை. வெளிச்சம் போன்றிருந்தவன் மின்னல். அவனை அடிக்கும் போது எழும் ஒலிதான் இடி. இவர்களின் உணவு, நீரும் வெளிச்சமும்தான். இவர்கள் இருவருக்குமே பிடிக்காதது புகை. புகையை முகர்ந்து விட்டாலொழிய இருவருக்கும் கோபம் வந்து விடும். இவர்கள் ஒற்றுமையோடு இருந்தால் எங்குமே மழைபெய்யாது. அதனால்தான் முனிவர்கள் யாகம் செய்து புகையை உண்டாக்கி இவர்களுக்குக் கோபம் வரச் செய்கிறார்கள். மழையும் இடியும் மின்னலும் எப்படி ஏற்படுகின்றன என்று இப்பொழுது தெரிந்து கொண்டாயா?" என்றார் வேணோர். பூதுகனும் தெளிந்த மனத்தோடு விடைபெற்றுக் கொண்டான்.

- என். கல்பனா



அர்ஜுனா, அர்ஜுனா!

அர்ஜுனன் பாசுபதாஸ்திரத்தைப் பரமனிடமிருந்து பெற ஒற்றைக் காலில் நின்று தவம் புரியலானான். இதனை அறிந்த கைலாயபதி, விஜயன் விருப்பத்தை நிறைவேற்ற மனமின்றிப் பல இடையூறுகளை விளைவித்தார். ஸ்ரீ கண்ணபிரான் உபாயத்தால் அர்ச்சுனன் எல்லா ஆபத்துக்களையும் வெற்றி கொண்டான். கடுங்கோபம் கொண்ட பரமசிவன் வருண பகவானை அழைத்து, அர்ஜுனன் தவத்தைக் கலைக்கும்படி கட்டளையிட்டார்.

வருண பகவான் இடியரசனை வரவழைத்து அர்ச்சுனன் தலைமேல் மோதி அவனை ஒழித்து விடும்படி ஏவினான். இதை அறிந்த கண்ணபிரான் அர்ச்சுனனிடம் ஓடிவந்து நடக்கப் போவதைக் கூறி, ஆபத்திலிருந்து தப்பித்துக் கொள்ளும் உபாயத்தையும் அவனிடம் கூறிவிட்டுச் சென்றார்.

கரு மேகங்கள் சூழ்ந்தன. எங்கும் இருட்டு. காது செவிடுபடும்படி பயங்கரமான கர்ஜனையுடன் இடியரசன் அர்ச்சுனன் தலைக்கு நேராக வந்தான். திடீரென்று அர்ச்சுனன் தலையை வேறு பக்கம் சாய்த்துக் கொள்ளவே, இடியரசன் குறி தவறியது. மீண்டும் பயங்கர ஒலியுடன் மோத வந்தான். இவ்விதம் பல முறை முயன்றும் அர்ச்சுனனை ஒன்றும் செய்ய முடியவில்லை. பல முறை குறி தவறியதால் ஆத்திரம் கொண்ட இடியரசன், இம்முறை அவன் மார்பைப் பிளந்து விடுகிறேன் என்று முழக்கிக் கொண்டு வந்தான். அருகில் வரும்போது அர்ச்சுனன் சற்றுச் சாய்ந்து லபக்கென்று இடியரசனைத் தன் கட்கத்தில் இடுக்கிக் கொண்டான்.

உடல் நடுங்க, விழி பிதுங்க இடியரசன் கெஞ்சி, ''காண்டீபா ! என்னை நீ உயிருடன் விட்டுவிட்டால், என் மகள் மின்னற்கொடியை உனக்கு மணம் செய்து வைக்கிறேன்'' என்று வேண்டினான். இதைக் கேட்ட அர்ச்சுனன், ''உன் மகள் மின்னற்கொடியை எனக்குத் திருமணம் செய்து தர வேண்டும். அத்துடன் நீ மேகத்தில் பயங்கரமாக இடிக்கும்போது பூவுலகில் உள்ள பயம் அடைந்த சிறுவர் சிறுமியர்கள் என் பெயரை உச்சரித்தால், நீ உடனே உன் ஒலியை நிறுத்திவிட வேண்டும். இவ்விரண்டையும் நிறைவேற்றுவேன் என்று சத்தியம் செய்து கொடுத்தால்தான் உன்னை விடுவேன்'' என்றான். அதன்படியே சத்தியம் செய்துவிட்டு விடுதலை அடைந்தான். மின்னல்கொடியோ பார்த்தனை மணக்க மறுத்து ஓடலானாள். வாக்குறுதியை நிறைவேற்ற அவளை இடியரசன் துரத்துகிறான். மின்னல்கொடியோ தோன்றியவுடன் மறைந்துவிடுகிறாள். கைக்குக் கிடைக்கவில்லையே என்ற வருத்தத்தில் இடியரசன் கண்ணீர்சிந்துகிறான். இன்றும்கூட மின்னல் மின்னியதும் அதனைத் தொடர்ந்து இடிசப்தம் கேட்பதையும், உடனே மழை பொழிவதையும் காண்கிறோமல்லவா ! இதுதான் மழை, இடி, மின்னல் தோன்றக் காரணம்!

பலத்த இடி சத்தம் கேட்டவுடன் குழந்தைகள் 'அர்ச்சுனா அர்ச்சுனா' என்று அலறுவதைப் பார்க்கிறோமே, அதுவும் இதனால்தான் !

- பி. அகிலா





கார்மேகம் பெற்ற வரம்!

வெகு காலத்திற்கு முன் சூரியன் உலகைச் சுற்றி வரும்போது கடலிலிருக்கும் முத்துக்களையும், வைரங்களையும் தன்னுடைய வெகு நீண்ட பல கைகளால் எடுத்து வந்தான். அவ்வாறு எடுத்தவற்றை வானமாகிய தன் மாளிகையில் அலங்காரமாகப் பதித்து வைத்தான். அவற்றைத் தான் நாம் நட்சத்திரங்கள் என்கிறோம். சூரியன் ஏராளமாக முத்துக்களையும் வைரங்களையும் வாரிக்கொண்டு போவதைக் கண்ட சமுத்திரராஜன் தடுக்க முயன்றான். சூரியன் கேட்கவில்லை. சமுத்திரராஜன் மகாவிஷ்ணுவிடம் முறையிட்டான். உடனே மகாவிஷ்ணு சூரியனைக் கண்டித்து 'இனிமேல் நீ முத்துக்களை எடுக்கக் கூடாது' என்று கட்டளையிட்டார்.

கடவுள் கட்டளையை சூரியன் எப்படி மீறுவான்? ஆனால் முத்து வைரம் இவற்றின் மீது இருந்த ஆசையை அடக்க முடியவில்லை. ஆகவே அவனுடைய நான்கு பிள்ளைகளைக் கூப்பிட்டான். அவர்கள் பெயர், துகில் மேகம், பஞ்சு மேகம், பொதி மேகம், கருமேகம். அவர்களைப் பார்த்து, ''நீங்கள் மகாவிஷ்ணுவை நோக்கித் தவம் செய்யுங்கள். அவர் உங்கள் முன் தோன்றுவார். 'அப்போது கடலிலிருந்து முத்துக்களையும், வைரங்களையும் எப்போதும் நாங்கள் எடுக்க வரம் தர வேண்டும். எங்களை யாரும் தடை செய்யக் கூடாது' என்று கேட்டுக் கொள்ளுங்கள்'' என்றான்.

'உங்களைத் தடை செய்த காரியத்தை நாங்கள் வரமாகக் கேட்க மாட்டோம்' என்று முதல் மூன்று பிள்ளைகளும் கூறிவிட்டார்கள். கடைக்குட்டி கருமேகம் தந்தையின் வேண்டுகோளை ஏற்றுக் கொண்டான்.

பல ஆண்டுகள் கருமேகம் தவம் செய்தான். மகாவிஷ்ணு அவன்முன் தோன்றி 'குழந்தாய்! உனக்கு என்ன வரம் வேண்டும்? கேள்' என்றார். 'கடலிலிருந்து நான் முத்துக்களையும் வைரங்களையும் எடுத்துக் கொள்ள அனுமதி வேண்டும். என்னை யாரும் எப்போதும் தடுக்கக் கூடாது' என்று கூறி நமஸ்கரித்தான். 'சரி! உன் விருப்பப்படியே செய். ஆனால் எந்தக் காரணத்தாலும் எடுப்பதை நிறுத்தக் கூடாது. முத்துக்களை நீயே வைத்துக் கொள். ஆனால் உன்னை அடிக்காமல் யாரும் அவற்றைத் திரும்பப் பெற முடியாது' என்று புன்னகையோடு சொல்லி மறைந்தார். கருமேகம் நன்றி கூறியது.

கருமேகம் வாரி வாரி முத்துக்களையும் வைரங்களையும் எடுக்க ஆரம்பித்தான். அவற்றின் மேல் அளவிலா ஆசை ஏற்படவே அவற்றைத் தானே வைத்துக் கொள்ள ஆரம்பித்தான். அவற்றை மறைப்பதற்காகக் கரிய போர்வையால் போர்த்தினான். தகப்பனுக்கும் கொடுக்கவில்லை. சூரியனான தகப்பனார் எவ்வளவோ கேட்டார். கருமேகம் மறுத்தான். ஓடினான், ஒளிந்தான். மூட்டை பெரிதாகிக் கொண்டே வந்தது. சூரியனுக்கு வெகு கோபம் வந்து விட்டது. வைரங்களால் ஆன கழிகளும் கொடிக் கம்புகளும் அவரிடம் இருந்தன. அவற்றில் ஒன்றை எடுத்துக் கருமேகத்தை ஓங்கி அடித்தார். கருமேகம் அலறிக்கொண்டு முத்துக்களையும், வைரங்களையும் கீழே கொட்டினான். அவை மறுபடியும் கடலிலும் தரையிலும் உதிர்ந்தன. அதைச் சூரியனாலும் பிடிக்க முடியவில்லை.

கார்மேகத்தை சூரியன் அடிக்கும் வைரக் கொடிக் கம்பு தான் மின்னல். கருமேகம் அலறுவது தான் இடி. அது உதிர்க்கும் முத்துக்கள் தாம் மழை.

- வி. ரமேஷ்

அக்கினிதேவனுக்கும் வருணதேவனுக்கும் சண்டை

முன்பொரு சமயம் இந்திரலோகத்தில் பெருவிழா ஒன்று நடந்து கொண்டிருந்தது. அதற்குத் தேவாதிதேவர்கள் எல்லோரும் வந்திருந்தனர்.

விழா முடிந்து விருந்து நடந்துகொண்டிருந்தது. அக்கினி தேவனும் வருண தேவனும் எதிர் எதிரே அமர்ந்து சாப்பிட்டுக்கொண்டிருந்தனர். வேடிக்கைப் பேச்சுக்கிடையில் அக்கினிதேவனுக்கும் வருண தேவனுக்கும் யார் பெரியவர் என்ற வாக்குவாதம் ஏற்பட்டுவிட்டது.

வாய்ச் சண்டை முற்றி அடிதடியில் வந்து நின்றது. விருந்து பாதியில் முடிந்து விட்டது.

திரிபுரம் எரித்த விரிசடைக் கடவுளின் நெற்றியிலே தான் குடியிருப்பதால் தானே பெரியவன் என்று அக்கினி தேவன் கூறினான்.

அக்கினி தேவனின் அதீதமான கொடுமையை அடக்கி வைக்கவே, ஈசன் தன் தலையில் கங்கையைக் குடி வைத்திருப்பதாகவும், அக் கங்கையின் வயிற்றில் தங்கி இருந்துதானே அந்த அக்கினியின் கொட்டத்தை அடக்கி வைத்திருப்பதாகவும் வருணதேவன் கூறினான்.

இந்திரனை அவமானப்படுத்த வேண்டும் என்று உள்ளூறக் கருவிக் கொண்டிருந்த சிலருக்கு இந்த வாக்குவாதம் கையில் கிடைத்த புளியங்கொம்பாக இருந்தது. அவர்களுடைய கேலிப் பேச்சுக்கள் மேலும் அவ்விருவருடைய பகைமை உணர்ச்சியைத் தூண்டி விட்டன.

இருவரில் ஒருவர்கூடப் பணிந்து போக மறுத்து விட்டதால் இந்திரலோகமே ஒரு யுத்த களமாக மாறிவிடக் கூடிய அபாய நிலை ஏற்பட்டது. ஒரு சாரார் அக்கினி தேவனை ஆதரிக்க; மற்றொரு சாரார் வருணதேவனிடம் ஒதுங்க; இந்திரனுடைய நிலையோ மிகத் தர்மசங்கடம் ஆக இருந்தது.

மனம் குழம்பிய நிலையில் இந்திரலோகத்தைக் காக்க என்ன செய்வது என்று யோசனை செய்து கொண்டிருந்தவனுக்குத் திடீரென்று ஒரு கருத்துத் தோன்றியது. பெரும் மேகக் கூட்டங்களை அவ்விரு சாரார் இடையே ஓட்டினான்.

புயலைப் போல் திரண்டு எழுந்து வந்த மேகக் கூட்டங்களினால் ஒருவரையொருவர் பார்த்துக் கொள்ள முடியவில்லை. கோபம் கொண்ட அக்கினி தேவன் தன் சாட்டையால் அம்மேகக் கூட்டத்தை அடிக்கத் தொடங்கினான். இதுவே மின்னலாகப் பளிச்சிடுகிறது. வருணனும் சும்மா இருக்க முடியவில்லை; தன்னிடமிருந்த கதாயுதத்தால் மேகக் கூட்டங்களை அடிக்கத் தொடங்கினான். இதுவே இடியாகக் கிடுகிடுக்கிறது. அந்த அடியைத் தாங்க முடியாமல் மேகக் கூட்டங்கள் சிந்துகிற குருதியே தண்ணீராக—மழையாகப் பொழிகிறது.

அக்கினிக்கும் வருணனுக்கும்இடையே சண்டை மூளத் தொடங்கும் பொழுதெல்லாம் இந்திரன் மேகக்கூட்டங்களைக் குறுக்கே அனுப்புவதால் தான் மழை, இடி, மின்னல் தோன்றுகின்றன என்று என் பாட்டி கதை சொல்லுவாள்.

நா. ஷண்முகம்




அத்திப்பழம்

அத்திப் பழம் * சாப்பிட்டிருக்கிறாயா? ரொம்ப ருசியானது மட்டுமல்ல. உடலுக்கு ஆரோக்கியமும் கூட.

உலகிலேயே ஓர் அதிசயமான பழம் அத்திப்பழம். அபூர்வமான ஒன்றைக் குறிப்பிடுவதானால் 'அத்தி பூத்தது போல' என்பார்கள். அத்திப் பூவை யாரும் பார்க்க முடியாது. ஆனால் பூ இல்லாமல் காய், பழம் உண்டாகாதே. அப்படியானால் அத்தியின் பூ எங்கு, எப்படிப் பூக்கும்? அத்திப் பழத்தை நீ விண்டு பார்த்தாயானால் உள்ளே நிறைய விதைகள் இருப்பது போலிருக்கும். ஆனால் இவை விதைகள் அல்ல. இவையெல்லாம்தான் அத்தியின் உண்மையான பூக்கள். இவை மகரந்தத் தூளை உற்பத்தி செய்யக் கூடியவை.

சரித்திர காலத்துக்கு முன்பிருந்தே மனிதனால் சிறந்த உணவாக மதிக்கப்பட்டது அத்திப் பழம். ஒரு காலத்தில் இவை மகாராஜாக்களின் உணவாகவும் சிலபோது அடிமைகளின் ஆகாரமாகவும் விளங்கியதுண்டு. அத்திப் பழங்களின் சாற்றிலிருந்து சாராயமும்; மதுவும் தயாரிக்கிறார்கள். ஆடைகளுக்குச் சாயப் பொருளாகவும் பயன்படுகிறது. இதன் இலைகள் தந்தத்துக்கு மெருகு கொடுக்க உதவுகிறது. மரத்தின்பட்டைகளிலிருந்து கயிறு தயாரிக்கிறார்கள்.

அத்தியில் அநேக வகைகள் உண்டு. அத்திப் பழங்களில் அதிக ருசியானது இஸ்மிர் அத்திதான். துருக்கியிலுள்ள ஓர் ஊரின் பெயரைக் கொண்ட அத்தி இது. இந்த வகை அத்திகளைக் கலிபோர்னியா மாநிலத்தில் ஏராளமாகப் பயிர் செய்கிறார்கள். இஸ்மிர் அத்திகளைக் காப்ரி என்ற வகை அத்திகளின் மகரந்தச் சேர்க்கையின் மூலமே விளைவிக்கிறார்கள். காப்ரி அத்தியில் ஏராளமான மகரந்தம் உண்டு. இதைக் குளவி போன்ற ஒரு வகைப் பூச்சிகள் இஸ்மிர் அத்திக்குக் கொண்டு வந்து சேர்க்கின்றன. இந்தப் பூச்சிக்கு அத்திக் குளவி (Fig wasp) என்றே பெயர். காப்பிரி அத்திக்குள் இக் குளவிகள் முட்டையிடத் தயாராகும்வரை வசிக்கின்றன. முட்டையிடும் வேளையில் தன்னுடன் ஏராளமான காப்ரி மகரந்தத் தூள்களுடன் இஸ்மிர் அத்திக்குள் புகுந்து கொள்ளுகின்றன. அப்போது காப்ரி மகரந்தத்தை இஸ்மிர் அத்தி மலர்களோடு கலந்து விடுகின்றன.





பனிக்கட்டி மிதப்பதேன்?

பனிக்கட்டி (ஐஸ்) என்பது திடமான பொருள். ஒரு குறிப்பிட்ட உறை நிலையில் தண்ணீர் பனிக்கட்டியாக இருக்கிறது. இப்படித் தண்ணீர் உறையும் போது அது விரிவடைகிறது. பத்து கனஅடி தண்ணீர் உறைந்தால் பதினொரு கனஅடி ஐஸாகிறது.

தண்ணீரில் ஒரு பொருள் மிதப்பதும் மூழ்குவதும் ஒரு குறிப்பிட்ட நியதிப்படி நிகழ்கின்றன. இதைக் கண்டவர் கி. மு. மூன்றாம் நூற்றாண்டில் வாழ்ந்த கிரேக்க கணித மேதையான ஆர்கிமிடிஸ் என்பவர். மரம் நீரைப் போல் அரை மடங்குதான் கனமுடையது. ஆகவே ஒரு மரத் துண்டை நீரில் போட்டால் அதன் நிறையில் பாதி அளவு நீர் அதைத் தாங்கி நின்று மிதக்கச் செய்கிறது. கார்க்கின் கனம் நீரின் கனத்தில் ஐந்தில் ஒரு பங்கு. பனிக்கட்டியை நீரில் போட்டால் அதன் பெரும் பகுதி மூழ்கிச் சிறிது மட்டும் மேலே தெரியும் மிதந்தபடி. ஐஸ்பர்க் என்னும் பனிப் பாறைகள் நீர் மட்டத்துக்கு மேலே தெரிவதைப் போல் ஒன்பது மடங்கு நீருக்குள் இருக்கும். ஆகவே மாலுமிகள் கடலில் மிதந்து வரும் பனிக்கட்டிகள் விஷயத்தில் மிக்க எச்சரிக்கையோடிருப்பார்கள்.

உறை நிலைக்கு அருகே இருக்கும் போது பனிக்கட்டியில் அழுத்தம் கொடுத்தால் அது உருகும். ஆனால் இந்த அழுத்தத்தை விடுதலை செய்யும்போது உடனே மிக விரைவில் அது உறைந்து கெட்டியாகி விடும். பனித் துகள்களைப் பந்தாக உருட்டிப் பிடிக்கும்போது பனிப் படிகங்கள் உன் கையில் உருகும். ஆனால் அதை நீ அழுத்திப் பிடிப்பதை நிறுத்தியதும் அப்படி உருகிய நீர் சட்டென்று உறைந்து பந்தை உறுதியாக்கிவிடும். இது ஏன்? தண்ணீர் உறையும்போது மிக அதிகமாக விரிவடைகிறது. ஐஸ் உண்டாகும்போது மிக அதிகமான சக்தியும் உண்டாக்கப் படுகிறது. பெரிய பாறைகளை அதன் பிளவுகளில் நீரைச் செலுத்தி அதை உறையச் செய்வதன் மூலம் பிளக்கச் செய்கிறார்கள். பெரிய பெரிய மலைகளெல்லாம் கால ஓட்டத்தில் பொடியாவது தண்ணீர் உறையும்போது விரிவதினால்தான்.


டெர்மைட் என்றால் என்ன?

டெர்மைட் என்பது எறும்புகளைப் போல உழைப்பாளிகள். ஆனால் எறும்புகளினின்று மாறுபட்டவை. டெர்மைட்களைச் செல்லு என்று கூறலாம். இவைகளுக்குப் பெரிய இடையுண்டு. ஒன்று போல வளைந்த ஸ்பரிசக் கருவிகள் இரண்டும் மங்கலான உடல் நிறமுமுடையவை.

மித உஷ்ண, உஷ்ணப் பிரதேசங்களில் உலகெங்கும் காணப்படுகிறது. சாதாரண டெர்மைட்டுகள் மரங்களைக் குடைந்து அந்த மரங்களையே உணவாக உண்டு 'காலனி'கள் அமைத்து வாழ்கின்றன. பல அறைகளை உண்டாக்கிக் களிமண் போன்ற ஒருவகைப் பொருளால் உள்ளே பூச்சுக் கொடுக்கின்றன. இதனால் அங்குள்ள காற்று ஈரப் பசையுடையதாக இருக்கும்.

உஷ்ணப் பிரதேசங்களில் டெர்மைட்டுகளில் பல இனம் கூடுகள் கட்டியே வாழ்கின்றன. பூமியின் மீது முப்பதடி உயரத்துக்கும் ஐம்பதடி அகலத்துக்கும் கூட மலைபோலக் கூடு கட்டக் கூடியவை. சில வகை மரங்களில் கூடு கட்டுகின்றன. இந்தக் கூடுகள் பலவித உருவ அமைப்பில் இருக்கும். இக் கூடுகள் பறவை, பல்லி, சிலந்தி, எறும்பு ஆகியவைகளின் தாக்குதல்களிலிருந்து காக்கின்றன. ஆப்பிரிக்காவிலுள்ளசிலவகை டெர்மைட்டுகள் தங்கள் கூடுகளின் (புற்று) மீது குடை போன்ற அமைப்பை உருவாக்கிவிடுகின்றன. இதனால் மழைநீர் தங்காமல் வழிந்து விடுகிறது. உஷ்ண நிலை உள்ளே ஒரே சீராக இருக்கும்படியும் புற்றுக்களை அமைப்பதில் வல்லவை டெர்மைட்டுகள்.

டெர்மைட் காலனியில் பிறக்கும் புதிய வேலைக்கார டெர்மைட்டுகளாலேயே புற்றுக்கள் வளர்கின்றன. வேலைக்கார டெர்மைட்கள் தங்கள் பெற்றோர்கள் வாழ்ந்து வெளிவந்த கூட்டில் வாழ்வதே கிடையாது. அதுமட்டுமல்ல; அந்தக் கூட்டின் டெர்மைட்டுகளோடு பழகும் வாய்ப்பும் இவைகளுக்குக் கிடையாது. இந்தக் கூடு பூர்த்தியானதும் அதிலிருந்து ராஜாவும் ராணியும் வெளியேறி வேறு புதிய காலனி அமைக்கும்.




எலும்பு முறிவு


மனித எலும்பு மிக மிக உறுதியானதோர் அமைப்பு. அதில் முறிவே ஏற்படாது. ஒரு செங்கல் தாங்கும் கனத்தை விட முப்பது மடங்கு பளுவை மனித எலும்பு தாங்க வல்லது. நம் உடலில் மிகவும் உறுதியான எலும்புக்கு ஷின் *(Shin)* எலும்பு என்று பெயர். இதனால் 3600 பவுண்டு நிறையைத் தாங்க முடியும்.

இத்தனை உறுதியுடைய நம் எலும்புகளிலும் சில வேளைகளில் முறிவு ஏற்படுகிறது; முரட்டுத்தனமாகச் செயல்படுவதினால். எலும்பு அது உடையும் முறைகளைக் கொண்டு ஒவ்வொரு வகைக்கும் ஒவ்வொரு பெயர் கொடுத்திருக்கிறார்கள் மருத்துவத் துறையில். எலும்பில் ஒரு சிறு விரிசல் மட்டுமோ அல்லது அதன் அமைப்பில் ஒரு பகுதி மட்டுமோ உடைந்து மீதி உள்ள பாகம் வளைந்து இருக்குமானால் இதற்கு இன்ஃபிராக்ஷன் *(Infraction)* என்று பெயர். எலும்பு இரு துண்டுகளாக உடைந்திருக்குமானால் அதற்கு சிம்பிள் ஃபிராக்சர் *(Simple Fracture)* என்று பெயர். எலும்பு இரண்டுக்கு மேற்பட்ட துண்டுகளாக உடைந்திருக்குமானால் அதற்கு கம்மினியூட் ஃபிராக்சர் *(Comminute Fracture)* என்று பெயர். உடைந்த எலும்பு சதையைப் பொத்துக் கொண்டு வெளியே தெரியுமானால் அதற்குக் காம்பவுண்டு ஃபிராக்சர் *(Compound Fracture)* என்று பெயர்.

உடைந்த பகுதிகளை முடிந்த அளவுக்கு அதே நிலையில் மிக நெருக்கமாக இணைத்து வைக்க வேண்டும். எலும்புகளை ஒட்டவைக்க டாக்டர் எவ்விதமான பிசினையும் பயன்படுத்துவதில்லை. எலும்புகள் இவ்விதமான பிசினைத் தாங்களே விரைவில் உற்பத்தி செய்து கொண்டு விடுகின்றன.

எலும்பு முறிவு ஏற்பட்ட சில மணி நேரங்களுக்குப் பிறகு கட்டி தட்டிப் போயிருக்கும் ரத்தத்தில் ஒன்று சேர்க்கும் இளம் திசுக்கள் தோன்றுகின்றன. இப்படித் தோன்றும் திசுக்கள் வெகு வேகமாகப் பெருகிச் சுண்ணாம்புச் சத்தாக மாறுகின்றன. முறிவு ஏற்பட்டு 72லிருந்து 96 மணிகளுக்குள் இந்தத் திசுக்கள் ஒருங்கிணைந்து முறிவு ஏற்பட்ட எலும்பு முனைகளை ஒன்று சேர்த்துவிடுகின்றன. சுண்ணாம்புச் சத்து அந்தப் பகுதி எலும்பைக் கெட்டியாகவும் உறுதியுள்ளதாகவும் ஆக்குகிறது. இதற்குப் பல மாதங்கள் பிடிக்கும்.





இன்னலை ஓட்டும் மின்னல்!

இருட்டு அசுரன் ஒருவன் இருந்தான். அவன் பெயர் விருத்திரன். இந்த விருத்திரன், ருத்திரன் என்கிற சிவபெருமானைக் குறித்துத் தவம் இருந்தான்.

கொடியவன் எனினும் கடும் தவம் புரிந்ததால் சிவபெருமான் இவன் முன் தோன்றினார்.

''ஸ்வாமி! இதுவரையில் உள்ள எந்த ஆயுதத்தாலும் எனக்குச் சாவு ஏற்படக் கூடாது. ஒரு மனித எலும்பைக் கொண்டு செய்த ஆயுதத்தால் தான் எனக்கு மரணம் ஏற்படலாம். அதுவும்கூட, அந்த மனிதன் தானே மனமுவந்து தன்னுடைய எலும்பைத் தந்து அந்த ஆயுதத்தைச் செய்திருந்தால் தான் என்னைக் கொல்கிற சக்தி அதற்கு இருக்கலாம்'' என்று வரம் கேட்டான் விருத்திரன்.

ருத்திரனும் அவனுடைய பெரிய தவத்தை மதித்து வரத்தை அளித்து விட்டார்.

அதன்பின் அசுரன் தன் அக்கிரமத்தை ஆர்ப்பாட்டமாகத் தொடங்கி விட்டான்.

மக்களுக்கும், மற்ற ஜீவராசிகளுக்கும், தாவரங்களுக்கும் ஜீவநாடியான தண்ணீரை எல்லாம் ஆட்டு மந்தைகளாக மாற்றி வானத்தில் குகைகள் அமைத்து அவற்றுக்குள் அடைத்து விட்டான். தன் இருட்டு நிறத்தால் இந்தக் குகைகளைக் கரு மேகங்களாக மாற்றி விட்டான்.

வாழ்வுக்கு உயிர் நாடியான நீர் அனைத்தும் களவு போனதும், ஜீவராசிகளுடைய ஒளி, ஒலி இரண்டும் அவர்களை விட்டுப் போய்விட்டன. இவற்றையும் அந்தப் பொல்லாத அசுரன் மேகங்களுக்குள் அடைத்துப் போட்டு விட்டான்!

ஆடுகளை மீட்பது யார்? அவற்றிடமிருந்து நீரைப் பாலாகப் பொழிய வைப்பது யார்? ஒலியை விடுவிப்பது யார்? ஒளியை வருவிப்பது யார்?

தேவராஜனான இந்திரன்தான் இந்தப் பொறுப்பை எடுத்துக் கொண்டான்.

''பொறுப்பெடுத்துக் கொண்டு என்ன பயன்? எப்படி முடிப்பேன்?'' என்று கலங்கிப் புலம்பினான் இந்திரன்.

''காரியத்தில் எதுவுமே செய்ய முடியாமல் என் கையைக் கட்டிப் போட்ட மாதிரி இருக்கிறதே! தானே மனமுவந்து ஒருவன் தந்த எலும்பைக் கொண்டு போர்க் கருவி செய்தால் ஒழிய, என் இந்திர ஜாலம் எதுவும் இந்த இருட்டசுரனிடம் பலிக்காதே, என் செய்வேன்?'' என்று பரிதவித்தான் இந்திரன்.

''வேந்தே, ஏங்காதே!'' என்று அபயக் குரல் கொடுத்தார் ததீசி என்ற முனிவர். ''நான் இருக்க, எலும்புக்கு எங்கே போவது என்று நீ திண்டாடலாமா? இப்போதே எடுத்துக் கொள், என் முதுகெலும்பை! அதனால் ஆயுதம் செய்து இருட்டசுரனை வெற்றி கொள்'' என்று உறுதியுடன் கூறினார் முனிவர்.

''என்ன! தங்களது முதுகெலும்பை எடுக்கவா? அப்படிச் செய்தால் தங்களது இன்னுயிர் முடிந்துவிடுமே!'' என்றான் தேவராஜன்.



இருட்டை விரட்டும் இடி!



''முடியட்டுமே!'' என்று பளிச்செனக் கூறினார் ததீசி. ''மன்னுயிர் வாழ என் இன்னுயிர் முடியட்டுமே. இன்னல் தீர எனதுயிர் பலியாகட்டுமே. அதுவே எனக்குப் பாக்கியம். உம், இன்னமும் தயங்காதே ; காலம் கடத்தாதே'' என்று இந்திரனை முடுக்கினார் தியாகமணியான முனிவர்.

'உலகம் வாழ வேண்டும் என்பதற்காக இந்தக் கொடிய காரியத்தைச் செய்ய வேண்டியிருக்கிறதே!' என இந்திரன் தவித்தான்.

'' மனத்தைக் கல்லாக்கிக் கொள். பாறாங்கல்கூட உடைந்து போகும். அதைவிட உறுதியான வஜ்ரக் கல்லாக (வைரக் கல்லாக) உன் மனத்தைக் கெட்டிப்படுத்திக் கொண்டு என் முதுகெலும்பைப் பிய்த்துக் கொள். உடனே அதுவும் வஜ்ரமாக மாறும். அதனால் செய்கிற போர்க் கருவி வஜ்ராயுதம் என்றே பெயர் பெறும். வைர ஆயுதத்தால் உலக வைரியான அசுரனைக் கொன்று நன்மை உண்டாக்குவாய்'' என்றார் முனிவர்.

தேவர்களும், ரிஷிகளும் அவரது பரோபகாரப் பெருமையைப் போற்றிப் புகழ்ந்தனர். இருட்டசுரனைக் கொல்ல அவர் கூறியது தவிர வேறு வழியே இல்லை என்று கூறி இந்திரனைத் தூண்டினர்.

'ஹஸ்தினி'

அசுரனைக் கொல்வதற்கு முதற்படியாக அரும் தவசியைக் கொன்றான் இந்திரன் — மனத்தை வைரமாக்கிக் கொண்டு. சொல்ல முடியாத வருத்தத்தோடு அவரது முதுகெலும்பை உருவி எடுத்துப் போர்க் கருவி செய்தான். அதுவே அவர் சொன்னதற்கேற்ப மிக உறுதியான வஜ்ராயுதமாயிற்று.

''அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு — அதாவது, 'அன்பு உள்ளம் கொண்டவர்கள் தமது எலும்பைக் கூடப் பிறரின் பொருட்டுத் தானமாகக் கொடுத்துவிடுவர்' என்று திருவள்ளுவப்



பொது இடங்களில் பிறர் சௌகரியத்தைக் கவனியாதிருப்பது கீழோர் குணம்.

— ராஜாஜி

தாயை அழ விடுவதில் மனிதர்கள் கவனமாக இருக்க வேண்டும். ஏனெனில், ஒரு தாயின் கண்ணீர்த் துளிகளை ஆண்டவன் எண்ணிப் பார்க்கிறான்.

— யூதர்கள்

பெருமான் ததீசியைப் பற்றித் தம் குறளில் குரல் கொடுக்கிறார்.

கருமேகக் கூட்டத்தைக் கன வேகமாக இந்திரன் நெருங்கினான். மேகத்தில் கறுப்பாகக் கரைந்திருந்த விருத்திரனுக்கு ஆச்சரியமாகிவிட்டது. "இந்திரப் பயல் நம்மிடம் தைரியமாக வந்து விட்டானே! நான் வரம் கேட்ட மாதிரி ஆயுதம் இவனுக்குக் கிடைத்து விட்டதா என்ன?" என்று வியந்தான்.

அந்த வியப்புக்கு வஜ்ராயுதமே விடை தந்துவிட்டது. சுளீர் சுளீர் என்று வஜ்ராயுதத்தால் மேகங்களைச் சாடினான் இந்திரன். வலி தாங்காமல் விருத்திரன் தன் உடம்பைச் சுளித்து நெரித்துக் கொள்ள, அப்போது உள்ளே திணித்து வைத்திருந்த ஒளி மின்னல் மின்னலாக வெளிவரலாயிற்று. ஒவ்வொரு சுளீர் அடிக்கும் ஒவ்வொரு பளீர் மின்னல்!

ஒவ்வோர் அடியும் ஒவ்வோர் இடியாயிற்று! அசுரன் அடைத்து வைத்திருந்த ஒலியும் இவ்விதமாக வெளிப்பட்டது.

தானே வெளியிட்ட இடியோசையில் பயந்து ஓட முயன்றான் அசுரன்.

இந்திரன் விட்டு விடுவானா? வெற்றி தந்த உற்சாகத்தில் மேலும் மேலும் வலுப் பெற்று நொறுக்கு நொறுக்கு என்று நொறுக்கினான் அசுரனை. அவன் உடனே ஆட்டுக் கூட்டங்களிடம் பாலாக மாறியிருந்த தண்ணீரைக் கறந்து பூமிக்கு அனுப்ப ஆரம்பித்து விட்டான்.

இப்படி ஆகாயத்துக்கும் பூமிக்குமாக விழுகிற பால் தாரையைத்தான் மழை, மழை என்று சொல்கிறோம்.

அசுரனின் கண்ணீரும் அந்தத் தண்ணீரில் சேர்ந்துதான் இருக்கிறது.

உலகத்துக்கு மீண்டும் ஒளி கிடைத்தது, மின்னலாக! ஒலி கிடைத்தது, இடியாக! நீர் கிடைத்தது, மாய ஆட்டுப் பாலாக!

இறுதியில் இருட்டசுரன் மாய்ந்தான்! இருந்தாலும் அவன் மறுபடியும் மறுபடியும் பிறப்பான். ஒவ்வொரு முறையும் ஒளி ஒலிகளையும் நீரையும் களவாடுவான்; பிறகு வஜ்ராயுதத்தால் வாங்கு வாங்கு என்று வாங்கிக் கட்டிக் கொண்டு இவற்றை மின்னலாகவும், இடியாகவும், மழையாகவும் வெளியிடுவான்.

* * *

குழந்தைகளே! எத்தனையோ ஆயிரம் வருஷங்களுக்கு முற்பட்ட வேதத்திலிருந்து இந்தக் கதை பல விதங்களில் வழங்கி வருகிறது!


இதற்கு நவீன விஞ்ஞானப்படியும் விளக்கம் உண்டு.


மேகங்களுக்கிடையே உரசல் ஏற்படும் போது மின்சாரம் உண்டாகிறது. இதனால்தான் மழை பெய்கிறது. மின்சாரமே மின்னலாகக் கண்ணுக்குத் தெரிகிறது. 'உஷ்ணத்தில் எதுவுமே விரியும், குளிரில் சுருங்கும்' என்று நீ படித்திருக்கிறாய் அல்லவா? ஒரே வெப்பமாக மின்சாரம் வெளிப்பட்டதும் காற்று மண்டலம் அந்தச் சூட்டில் விரிகிறது. உடனே மழையின் குளிரில் அந்த விரிந்த காற்று மண்டலம் சடாரெனச் சுருங்குகிறது. விரிவின் அதிவேகமான சுருக்கத்தால்தான் "டமடம" என்ற இடியோசை எழும்புகிறது.

இதையெல்லாம் நிதானமாகப் படித்துப் புரிந்து கொள்ளுங்கள். நம் முன்னோர்கள் கதைகளுக்குள்ளேயே எத்தனை உயர்ந்த கருத்துக்களை வைத்திருக்கிறார்கள் என்று புரிந்து கொண்டு அவர்களை வணங்குங்கள்.

அன்றே அப்பா சொன்னார்!

1905ல் பழைய டில்லியில் புராதனமான முஸ்லிம் குடும்பத்தில் ஒரு குழந்தை பிறந்தது. இரண்டரை வயது வரை எழுந்து நடக்கவோ, பேசவோ தெரியாத சவலைப் பிள்ளையாகவே இருந்தது அந்தக் குழந்தை. யாரேனும் தெரிந்தவர்களைக் கண்டால் மட்டும் சிரிக்குமாம். பெற்ற தாய் மிகவும் கவலைப்படுவதைக் கண்ட அந்தக் குழந்தையின் அப்பா சொன்னாராம்:





இந்தியக் குடியரசின் இப்போதையத் தலைவர்

'இப்போது இப்படித்தான் இருப்பான். பிறகு பொறுத்திருந்து பாருங்கள். எப்படி வரப் போகிறான் என்று!'' அந்தக் குழந்தைதான் இன்று பாரதத்தின் ஜனாதிபதியாகி யிருக்கும் ஜனாப் ஃபக்ருதீன் அலி அஹமது அவர்கள்.


ஃபக்ருதீனின் அன்னையார், புகழ்பெற்ற முகலாயக் கவிஞர் மிர்ஜா காலிஃபின் குடும்ப வாரிசு. அப்பா, இந்திய ராணுவ மருத்துவ அதிகாரியாக ஆங்கிலேயருக்குச் சமமாக, அதே அந்தஸ்து மங்காமல் வாழ்ந்தார். அப்பா ரொம்பவும் கண்டிப்புக்காரர். ஆங்கிலேய அதிகாரிகளிடம்கூட விறைப்பாகத்தான் இருப்பார் அவர்.

ஃபக்ருதீனுக்கு உருது கற்பிக்கத் தனியாக ஆசிரியரை நியமித்திருந்தார். அரபும், ஆங்கிலமும் கற்றுத் தரவும் ஏற்பாடு செய்திருந்தார். பையனுக்குச் சரியாக எழுத வராதபோது, அவனுடைய இரு விரல்களுக்கிடையே பென்சிலை வைத்து, அவன் வலி தாளாமல் துடிக்கும் வரை வாத்தியார் அழுத்துவாராம்.



மயக்கம் தந்த முடிவு!

அப்பாவுக்குப் பயந்து கொண்டாவது ஃபக்ருதீன் நன்றாகவே படித்து வந்தான். அவனுக்கு எதிர்பாராத அதிர்ச்சி ஒரு முறை ஏற்பட்டது. உயர்நிலைப் பள்ளித் தேர்வில் தோற்றோர் பட்டியலில் ஃபக்ருதீனின் பெயரும் இருந்தது. இதைக் கண்ட ஃபக்ருதீன் இடிந்தே



போய் மயங்கி விழுந்து விட்டான். அப்பா சமாதானம் சொல்லியும் கேளாமல் பட்டினி கிடந்தான். இரண்டு நாட்கள் கழிந்த பின்னர், 'தேர்வில் தோற்றது வேறொரு ஃபக்ருதீன், இவனல்ல' என்ற செய்தி வந்த பின்னர் தான் உணவு ஏற்றான்.

படிப்பைப் போலவே ஃபக்ருதீனுக்கு விளையாட்டிலும் பெரு விருப்பம் உண்டு. மாணவப் பருவத்தில் ஹாக்கி, கிரிக்கெட், கால்பந்து விளையாட்டுக்களில் பல பந்தயங்களில் கலந்து கொண்டு பரிசுகள் பெற்றுள்ளார்.

மாதம் ரூபாய் ஐந்நூறு

பஞ்சாப் பல்கலைக் கழக வழியே 1921ல் மெட்ரிக்குலேஷனை முடித்த பின்னர் தில்லியில் உள்ள ஸ்டீஃபன் கல்லூரியில் சேர்ந்தார். புகழ் பெற்ற இக் கல்லூரியில் படித்தால் மேற்படிப்புக்கு இங்கிலாந்துக்குச் செல்லப் பயிற்சி கிட்டும் எனக் கருதினார். அவர் இங்கிலாந்துக்குப் போவது அம்மாவுக்குப் பிடிக்கவில்லை. என்றாலும், அப்பா லண்டனிலுள்ள தம் ராணுவ நண்பர்களுக்கெல்லாம் பையனை அனுப்பப்போவது பற்றி ஏற்கனவே எழுதி விட்டார். பையன் ஒரு ஐ.ஸி.எஸ். அதிகாரியாக வேண்டும் என்பது அப்பாவின் ஆசை.

ஃபக்ருதீன் கேம்பிரிட்ஜில் சேர்ந்து வரலாறு படித்தார். வீட்டிலிருந்து மாதம் தோறும் ஐந்நூறு ரூபாய் செலவுக்கு வரும். மேலும் அப்பாவின் இங்கிலாந்து நண்பர்கள் தேவைப்பட்டபோதெல்லாம் உதவினர்.

கேம்பிரிட்ஜ்

கேம்பிரிட்ஜில்தான் அவருக்கு முதன் முதலாக அரசியலில் நாட்டம் ஏற்பட்டது. அந்நிய ஆதிக்கத்தின் கீழ் பாரதநாடு பட்டு வரும் துயரங்களையெல்லாம்உணரத்தொடங்கினார். அங்குதான் 1925ல் முதன் முறையாக இவர் ஜவாஹர்லால் நேருவைச் சந்தித்தார்.

அவர் முகமதலி ஜின்னாவைச் சந்தித்ததும் அப்போதுதான். ஜின்னாவின் மதவாத வலைக்குள் ஃபக்ருதீன் சிக்கவில்லை. தேசிய உணர்வினை ஊட்டிய அபுல்கலாம் ஆசாதும், கித்வாயும் அவரைக் கவர்ந்தனர்.

வால் பிடிப்பதா, வக்கீல் வேலையா ?

ஃபக்ருதீன் கேம்பிரிட்ஜில் ஐ.ஸி.எஸ். பரீட்சைக்காகத் தீவிரமாகப் படித்துக் கொண்டிருந்தபோது, அவருக்கு அம்மைக்கட்டு வந்து விட்டது. பரீட்சைக்குப் போக முடியவில்லை. வேறு வழியின்றிச் சட்டம் படிக்கத் தொடங்



கினார். 1928ல் பார் அட் லா ப துடன் பாரதம் திரும்பினார். டை அரசாங்க உத்தியோகத்தில் நுழைந்து விடவேண்டும் என அப்பா ஆசைப்பட்டார். ஆனால் பையனுக்கோ பிரிட்டிஷாருக்கு வால் பிடித்து ஏவல் செய்ய விருப்பம் இல்லை. ஃபக்ருதீன் அட்வகேட் ஆனார்.

சிறு வயதில் பெரும் பதவி

என்றாலும் அவருக்கு, தீவிர அரசியல்வாதியாகி நாட்டுக்குத் தொண்டாற்றும் ஆர்வமே மேலிட்டு வந்தது. 1931ல் இந்திய தேசிய காங்கிரஸ் இயக்கத்தில் சேர்ந்தார். அஸ்ஸாம் சட்டமன்றத் தேர்தலில் வென்று, மிக இளம் வயதில் வருவாய்த் துறை அமைச்சரானார். அஸ்ஸாம் தேயிலை, காப்பித் தோட்ட முதலாளிகளான வெள்ளையர்கள் கொள்ளை லாபமடித்ததைத் தடுக்க முதன் முதலாக விவசாய வருமான வரிச் சட்டத்தைக் கொண்டு வந்தார்.

காந்தியடிகளின் பேரணியில் ஒன்றிய ஃபக்ருதீன், தனி நபர் சத்தியாக்கிரகம் முதலியவற்றில் தீவிரமாகக் கலந்து கொண்டார். பல ஆண்டுகள் பாதுகாப்புக் கைதியாக வைக்கப் பட்டிருந்தார்.

மாப்பிள்ளை எங்கே?

1945-ல் இவருக்குத் திருமணம் செய்து, குடும்பப் பொறுப்பைத் தலையில் கட்டவேண்டும் என்று இவருடைய சகோதரி கருதினார். முகம்மதிய சம்பிரதாயப்படி, தம் தம்பிக்கேற்ற பெண்ணை அவரே தேடி நிச்சயித்தும் விட்டார்.

புகழ் பெற்ற பாதுஷாக்கள் மரபில் பிறந்த அபிதா பேகம், அலிகார் பெண்கள் கல்லூரியில் அப்போது தான் பி. ஏ. பட்டம் பெற்றிருந்தார். ஃபக்ருதீனைவிட இருபது ஆண்டுகள் வயதில் இளையவரான இந்தப் பெண்ணைத் தேர்ந்தெடுத்து நிச்சயம் செய்யப் போயிருந்தபோது, பெண்ணின் தகப்பனார் கேட்டார்: ''மாப்பிள்ளை இப்போது என்ன செய்கிறார்?''

''ஜெயிலில் இருக்கிறார்!''

1945 நவம்பரில் பக்ருதீனுக்கும் அபிதாவுக்கும் திருமணம் ஆயிற்று.

புகழ் தந்த இல்லத்தாள்!

அபிதா ஓவியம் வரைவதில் ஈடுபாடுள்ளவர். வீடெல்லாம் அவர் தீட்டிய சித்திரங்கள்தான். பொது நலத் தொண்டிலும் நாட்டம் கொண்டு பல நற்பணிகளுக்கு வித்தூன்றியுள்ளார். கணவர் பொதுநலப் பணியில் முழு



நேரமும் ஈடுபடுவதைச் சரிக்கட்டும் வகையில் குடும்பப் பொறுப்புக்களையெல்லாம் தாமே சுமந்து செல்கிறார். இனிமையும் எளிமையும் கலந்த இல்லத்தரசி என்னும் புகழ் அபிதாவுக்கே சொந்தம்!

ஃபக்ருதீன் அலி—அபிதா பேகம் தம்பதியருக்கு இரு பையன்களும் ஒரு பெண்ணும் உள்ளனர். பர்வீஸ் டாக்டர். இளையவரான படார், டெல்லிக் கல்லூரியில் படிக்கிறான். மகள் ஷபீனா தன் கணவருடன் அமெரிக்காவில் இருக்கிறாள்.

நகைச்சுவை

''ஃபக்ருதீன் 18 வயதுப் பெண்ணைத் திருமணம் செய்து கொண்டவர்'' எனப் பாராளுமன்றத்தில் ஓர் எதிர்க் கட்சி உறுப்பினர் அவரைத் தாக்கினார். கொஞ்சம் கூடக் கோபப்படாமல், நிதானமாக எழுந்து பக்ருதீன் பதில் சொன்னார்:

''கனம் உறுப்பினர் கூறுவது மிகவும் சரியே. நான் பதினெட்டு வயதுப் பெண்ணைத்தான் திருமணம் செய்து கொண்டேன். ஆனால் இப்போது இல்லை. இருபது வருடங்களுக்கு முன்! அப்போது என் மனைவிக்குப் பதினெட்டு வயதுதான்!''


பாசம்

நேருஜியிடம் அத்யந்த அன்பும் விசுவாசமும் கொண்ட ஃபக்ருதீன், அஸ்ஸாம் அரசியலை விட்டு மத்திய அரசுப் பணிக்கு இடம் பெயர்ந்தார். இவருக்குப் பிரதமர் இந்திராவை ஆறு வயது முதலே தெரியும். அவரிடம் என்றென்றும் நல்லெண்ணம் கொண்டிருந்தமையால், அவருடைய அமைச்சரவையில் பல பதவிகளைத் தொடர்ந்து வகித்து வந்தார் ஜனாப் ஃபக்ருதீன்.

நேருஜியை எப்போதும் சிந்தையில் போற்றும் இவர் நேருஜி காலமான செய்தியைக் கேள்விப்பட்டதும், 'ஓ' என வாய் விட்டு அலறிவிட்டார். தம் தந்தையார் இறந்தபோது மட்டுமே அதற்கு முன்னர் இப்படிக் கதறி அழுதாராம்!

இன்று பாரதத்தின் ஐந்தாவது ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள ஜனாப் ஃபக்ருதீன் அலி அஹமது அவர்கள் குறுகிய மத எல்லைகளைக் கடந்தவர்; மனிதாபிமானம் கொண்டவர். நல்ல மரபும் மாண்பும் கலந்த அவரது தலைமையில் பாரதம் சிறந்தோங்க இறைவன் அருள வேண்டுவோம்.





3
பலே பாலுவும் பாட்டில் பூதமும்
கதை: வாண்ணம் ~ சித்திரம்: செல்லம்
பாலு பள்ளிக்கூடம் போகிறான்
ஜோர்திப்! மணி பத்தாகிவிட்டது. பள்ளியில் முதல் மணி அடித்திருப்பார்கள். முதல் பீரியட் சிடுமூஞ்சி சிங்காரம் வாத்தியாரோடது. ஓடியா....
பிரபுவே! கவலை வேண்டாம். இதோ ஒரு நொடியில் உங்களை...
ஏய்... ஏய்... என் குழந்தை! இதென்ன அநியாயம்?
அநியாயம் ஒன்றுமில்லேம்மா. அவசரம்! என் பிரபுவுக்குப் பள்ளிக்கு நேரமாகிவிட்டது. அதனால்தான் உன் குழந்தையின் தள்ளுவண்டியில்.... சும்மா கத்தாதே!
ஏன் நேரங்கழித்து வருகிறாய்...ம்
என் எஜமானர் மீது கைவைக்க உனக்கு அத்தனை துணிவா? இதோ...
என் டர்பனைப் பாழாக்கி விட்டாயே. யார் நீ....
நான் நான்தான்!
ஆ! ஐயோ,



பாலு! உன்னால் வகுப்பின் அமைதியே குலைந்து விட்டது. நீட்டு கையை....
ஹு...ஹு ...ஹா! என் கண் முன்னால் என் பிரபுவைப் பிரம்பால் அடிப்பதா? என் கத்தி எதற்காக இருக்கிறது?
பாபுவின் எதாககட்சியைச் சேராத கோபு ஆசிரியருக்குப் பரிந்து பேசலானான்.
இதென்னது அநியாயம்! இந்த தப்பாலுப்பயல் இப்படி யாரையோ வகுப்புக்குள் கூட்டி வந்து....
அநியாய மல்லீலடா, நீ என் சீட்டுக்கடியில் டிராயிங்பின்னை வைத்தாயில்லையா? அதுக்கு இந்தா வாங்கிக்கோ!
அறிவிற் சிறந்தவரே! என் பிரபுவின் உடலில் ஊசி குத்தியதினாலே தான் அவர் அப்படி அலறினார்.
ஹா...!
குழம்புக்காரப் பையன்களோடு என் பிரபு இனி சேர்ந்து உட்கார மாட்டார். அவருக்குத் தனியான இருக்கை இதோ தயார்த்துத் தருகிறேன்.
அறிவளியான ஆசிரியப் பெருமானே! இனி நீங்கள் பாடம் நடத்துங்கள். வகுப்பில் எவ்விதக் குழப்பமும் ஏற்படாது.

பிலிப்பைன்ஸ்

பரமேசுவரத் தாத்தா தம்முடைய துணிமணிகளைப் பெட்டிக்குள் வைத்துக் கொண்டிருந்தார். விபூதி சம்புடத்தில் பழநியாண்டவர் விபூதி இல்லை. அதற்காகக் கிட்டுவைக் கூப்பிட்டார். கிட்டுவோடு பட்டுவும் வந்தாள். தாத்தா பெட்டி படுக்கைகளை 'பாக்' செய்வதைக் கண்ட கிட்டு ''எங்களை விட்டு எங்கே தாத்தா பயணம்?'' என்றான்.

''நம்ம எம். எஸ். அம்மாவுக்கு அந்த மாக்ஸாய் ஸாய் 'அவார்டு' கிடைத்திருக்கு, இல்லையா?


''உங்களுக்குத் தெரியாமல் மணிலா போய் வந்து உங்களிடம் அந்தப் பரிசளிப்பு வைபவத்தை விவரிக்க வேண்டும் என்று எண்ணினேன். இந்த விபூதி சம்புடம் என் இஷ்டத்தை அம்பலமாக்கி விட்டது. சரி, கிளம்புங்கள்!'' என்று மந்திர மெழுகு டப்பாவைக் கையில் எடுத்தார்.

பரமேசுவரத் தாத்தாவும் குழந்தைகளும் மரகதக் கம்பளத்தால் போர்த்திக் கொண்டு கம்பீரமாக நின்ற ஒரு மலைச்சாரலில் இருந்தார்கள். ''மலை முழுவதையும் எத்தனை அழகாக நெல் வயல்களாக்கி யிருக்கிறார்கள். கண்கொள்ளாக் காட்சி. இங்கேயே இருந்து விடலாம் போலிருக்கிறதே!'' என்றாள் பட்டு மகிழ்ச்சி தாங்காமல்.

''ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னால் இங்கு குடியேறிய மலாய்க்காரர்களின் கைவேலைதான் இந்த மலைச் சாரல் வயல்வெளிகள். இதை உலகின் எட்டாவது அதிசயம் என்று கூறுவார்கள்.''

''இப்போது நாம் ஃபிலிப்பைனில் தானே.....?'' என்றான் கிட்டு.

''சந்தேகமா? ஃபிலிப்பைன் என்பது ஏராளமான தீவுக் கூட்டங்களைக் கொண்ட ஒரு நாடு. தீவுக் கூட்டமென்றால் ஒன்றிரண்டல்ல. 7,107 தீவுகள்— வடக்குத் தெற்காகச் சிதறிக் கிடக்கின்றன. இவைகளில் 4000 தீவுகளுக்கு இன்னும் பெயர்கூட வைக்கப்படவில்லை. 462 தீவுகள் ஒவ்வொன்றும் ஒரு சதுர மைலும் அதற்குக் கொஞ்சம் அதிகமுமான பரப்புள்ளது. பதினொரு தீவுகள்தாம் ஆயிரம் சதுர மைல்களுக்கு மேற்பட்ட பரப்புடையவை. அளவின் வரிசைப்படி இவை— 1. லூசான், 2. மின்டானோ, 3. சமார், 4. நெக்ராஸ், 5. பலாவான், 6. பானே, 7. மின்டோரோ, 8. லெய்டி, 9. செபு, 10. போஹால், 11. மாஸ்பேட் ஆகியவை.



''இதெல்லாம் உங்களுக்கு எப்படித் தாத்தா தெரியும்? முன்னமேயே இங்கு வந்திருக்கீங்களா?'' என்று கேட்டாள் பட்டு.

''வரவில்லை. ஆனால் நிறையப் படித்திருக்கிறேன்.''

''அணையாத எரிமலைகளுக்குப் புகழ் பெற்ற நாடு இல்லையா இது?'' என்றான் கிட்டு. பிறகு, ''வாருங்கள் தாத்தா. இந்நாட்டின் காட்சிகளைப் பார்த்துக் கொண்டே நடப்போம். நீங்கள் சொல்லிக் கொண்டு வாருங்கள்'' என்றான்.

''பிலிப்பைன்ஸ் தீவுக் கூட்டங்களில் ஒரு தீவில் ஒரு நாள் தங்குவது என்று வைத்துக் கொண்டால் கூட இதன் எல்லாத் தீவுகளையும் காண்பதற்கு எத்தனை நாட்கள் ஆகும் தெரியுமா? இருபது வருடங்களாகும்'' என்றார் தாத்தா.

''அம்மாடியோவ்!'' என்று அதிசயக் குரல் எழுப்பினாள் பட்டு.

''இந்தத் தீவுக் கூட்டங்களில் முதன் முதலில் கால் வைத்த ஐரோப்பியர்



புகழ்பெற்ற மாலுமியான ஃபெர்டினாண்டு மெக்கல்லன்தானே தாத்தா?'' என்று கேட்டான் கிட்டு.

''ஆமாம். அவர் ஒரு ஸ்பானிஷ்காரர். அவர் இங்கு அடியெடுத்து வைத்தது 1321ம் ஆண்டு மார்ச் மாதம். இந்தத் தீவுக் கூட்டங்களுக்கு முன்பு இருந்த பெயர் மா-ஜி (*Ma-ji*) மெக்கல்லன் இதைக் கண்டுபிடித்த அடுத்த மாதமே மாக்டான் என்ற தீவில் ஒரு சுதேசியால் கொல்லப்பட்டார். அவருக்குப் பிறகு இங்கு அடிக்கடி தொடர்ந்து வந்த ஸ்பானிஷ்காரர்கள் தங்கள் அரசர் இரண்டாவது ஃபிலிப் அவர்களின் நினைவாக இத்தீவுக் கூட்டங்களுக்கு **ஃபிலிப்பைன்ஸ்** (ஃபிலிப்பினோஸ்) என்று பெயரிட்டார்கள்.''

''அப்படியானால் இது இன்னமும் ஸ்பெயின் நாட்டின் ஆதிக்கத்துக்கு உட்பட்ட நாடா?''

''இல்லை. இரண்டாம் ஃபிலிப்பின் காலத்திலிருந்து சுமார் நானூறு ஆண்டுகள் இது ஸ்பானியர்களின் ஆதிக்கத்தில் இருந்தது. இங்கு கிறிஸ்துவ மதத்தையும் மேலை நாட்டு நாகரிகங்களையும் புகுத்தியவர்கள் அவர்கள் தான். 1898ல் ஸ்பானிஷ் அமெரிக்க யுத்தம் ஏற்பட்டது. அதன் முடிவில் இது அமெரிக்கர்களின் வசமாயிற்று.


''1935ல் இந்நாடு ஓரளவுக்குச் சுதந்திரம் பெற்றது. 1942—1945ல் இது ஜப்பானியர்களின் ஆதிக்கத்துக்கு உட்பட்டிருந்தது.

''அது இரண்டாவது உலகப் போரின் போது. அப்போதுதான் ஜெனரல் மக் ஆர்தர் ஜப்பானியர்களை இங்கிருந்து விரட்டி இதை மீட்டார். இல்லையா தாத்தா?'' என்றான் கிட்டு. சரித்திரத்தில் புலியாயிற்றே அவன்.

''ஆமாம். அதன் பிறகு 1946ல் இது பூரண சுதந்திரமுடைய நாடாயிற்று. இதுதான் இந்நாட்டின் சரித்திரம். பிலிப்பைன்ஸ் தீவுக் கூட்டங்களின் மொத்த நிலப் பரப்பு 115,758 சதுர மைல்கள். கிரேட் பிரிட்டனும் வடக்கு அயர்லாந்தும் சேர்ந்தால் எத்தனையோ அத்தனை. இதன் கடற்கரையின் நீளம் 10,850 மைல்கள். ஐக்கிய அமெரிக்க நாட்டின் கடற்கரையைப் போல இரண்டுமடங்கு. ஆனால் ஒழுங்கில்லாத கடற்கரைகள். ஏராளமான வளைகுடாக்களையும் இயற்கைத் துறைமுகங்களையும் கொண்டது இந்நாடு. லூஸான் தீவில் உள்ளது மணிலா வளைகுடா. இதுதான் இந்நாட்டின் பழைய தலைநகர். 770 சதுர மைல் பரப்புள்ளது. உலகிலேயே மிக நேர்த்தியான இயற்கைத் துறைமுகங்களில் ஒன்று மணிலா. மிண்டானோ என்னும் தீவின் கிழக்குப் பகுதியில்தான் உலகிலேயே இரண்டாவது மிக மிக ஆழமான கடல் பகுதி உள்ளது. ஆழம் என்ன தெரியுமா? 35,440 அடிகள்.....''

''அப்பாடி.....'' என்றான் பட்டு கீச்சுக் குரலில். ''மணிலா பழைய தலைநகர் என்றால் புதிய தலைநகர் எது?'' இது கிட்டுவின் வினா.

''மணிலா நகரை ஒட்டினாற்போல் உள்ள க்யூஸான் (*Quezon city*) நகரம்



தான் இன்றையத் தலைநகர். தேசப் படத்தைப் பார்த்தால் பிலிப்பைன்ஸ் இந்தோனேஷியாவுடன் நெருங்கிய தொடர்புடையது தெரியும். உண்மையில் ஒரு காலத்தில் இவ்விரு நாடுகளும் இணைந்தே இருந்திருக்க வேண்டும். பூகம்பங்களினால் இவை இப்படிப் பிரிந்து சிதறி இருக்க வேண்டும் என்று ஊகிக்கிறார்கள் ஆராய்ச்சியாளர்கள். பசிபிக் கடலில் உள்ள தீவுகளில் நிறைய எரிமலைகள் இருப்பதே இதற்கு ஆதாரம். இன்றும் கனன்று கொண்டிருக்கும் எரிமலைகள் ஏராளம் இப்பகுதிகளில்.

''பிலிப்பைன்ஸ் நாட்டில் ஏராளமான மலைச் சிகரங்கள் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி வரிசையாக இருக்கின்றன. இந்த நாடே மலைப்பாங்கான பிரதேசம்தான்....'' என்றார் தாத்தா.

''அதுதான் தெரிகிறதே, நாம் ஏறி இறங்கி வளைந்து போகும் போதே. அற்புதமான இயற்கைக் காட்சிகள். சுகமான சீதோஷ்ண நிலை....'' என்றான் பட்டு.

''மிக உயரமான மலைச் சிகரத்தின் பெயர் ஆபோ. (*Mount Apo*) மின்டானோ தீவில் உள்ளது. 9690 அடிகள் உயரம். லூஸான் தீவில் உள்ள மலைகள் கரடுமுரடானவை. பிலிப்பைன் தீவுகளில் உள்ள எரிமலைகள் அநேகமாக அவிந்து போனவைதாம். பத்தே பத்து மட்டும் கனன்று கொண்டிருக்கின்றன. இவைகளில் மாயான் என்ற எரிமலை அழகானது, பெரியது, சுறுசுறுப்பானது. அதாவது 1615 லிருந்து சுமார் முப்பது தடவைகள் தீக்குழம்பைக் கக்கிக் கர்ஜித் திருக்கிறது.



1874ல் இது வெடித்துத்தீயை உமிழ்ந்தபோது 1200 பேர்களைப் பலிகொண்டதாம். இங்கு பூகம்பங்களும் உண்டு. ஆனால் ஜப்பானைப் போல் அத்தனை மோசமாக இருக்காது.

''பூமத்திய ரேகைக்குச் சற்றே மேலாக அமைந்துள்ளது பிலிப்பைன்ஸ். உஷ்ணப் பிரதேசம்தான். ஆனாலும் குளிர்ந்த காற்று பசிபிக், சீனக் கடல்களிலிருந்து வீசுவதால் இதமாக, இன்பமாக இருக்கும். புயலும் சூறாவளியும் இந்நாட்டுக் கடற்கரைகளை அடிக்கடி தாக்கி ஏராளமான சேதங்களை உண்டாக்கும்.

''மலைகள், காடுகளால் மூடப்பட்டு விலைமதிப்புள்ள மரங்களை அளிக்கின்றன. எல்லாவிதமான கற்களையும் இம்மலைகளில் காணலாம். பவளச் சுண்ணாம்புக் கல்லும் இங்கு ஏராளம்.''

'' சிதறிக் கிடக்கும் இத்தீவுகளின் ஜனத்தொகை எவ்வளவு தாத்தா ? எல்லாத் தீவுகளிலுமே மக்கள் வசிக்கிறார்களா?'' என்று கேட்டான் கிட்டு.


''ஜனத்தொகை 2,20,00,000பேர்; இதில் பாதிப் பேர் லூஸான் தீவில் வாழுகிறார்கள். ஒரு மிலியனுக்கும் மேலே மணிலாவில் வசிக்கிறார்கள்.

''மற்றத் தீவுகளில் அதிக ஜனத்தொகை கிடையாது. பல தீவுகளில் மனிதர்களே வசிப்பதில்லை என்றுகிறது. அப்படித் தானே ?'' என்றான் பட்டு.

''அதேதான். அரசாங்க மொழிக்கு தாகலாக் (*Tagalog*) என்று பெயர். வெளிநாட்டுத் தொடர்புக்கு ஆங்கிலமும் ஸ்பானிஷ் மொழியும் மணிலா தான் நாகரிகமும் தொழில் வளமும் சுறுசுறுப்பு மிக்க நகரம். செல்வம் கொழிக்கும் சந்தோஷம் மிக்க நகரம். அடுக்கு மாடிக் கட்டடங்களையும் ஸ்பானிய முறைப்படி கட்டப்பட்ட சர்ச்சுகளையும், நவநாகரிகமான அமெரிக்கக் கார்களோடு கலாஸாஸ்கள் (*Callaesas*) ஊர்ந்து செல்வதையும் காணலாம் '' என்றார் தாத்தா.

'' கலாஸாஸ் என்றால் என்ன தாத்தா ?''


'' குதிரைகளால் இழுக்கப்படும் ரிக்ஷா வண்டி. வேலைப்பாடுகளுடன் கூடிய கூரையையுடையது. பிலிப்பைன் வாசிகளுக்குப் பிலிப்பினோஸ் என்று



பெயர். எப்போதும் சிரித்த முகத்துடன் காணப்படும் இவர்களுக்குச் சிறிய உடல், கருஞ் சிவப்பு நிறம். இவர்கள் பெரும்பாலும் மலேயாவிலிருந்து வந்தவர்கள். மதம், ரோமன் கதோலிக். கி.மு.200க்கும் கி.பி. 1400க்கும் இடைப்பட்ட காலத்தில் இந்தியா, சீனா, அரேபியா இங்கிருந்தெல்லாம் படகுகளில் வந்து குடியேறியவர்கள்.

''இவர்களைத்தவிர வேறு இரு இன மக்கள் இங்கு வசிக்கிறார்கள். நெக்ரிடாஸ் (*Negritos*) என்பவர்களும் இந்தோனேஷியர்களும். நெக்ரிடாஸ் மலைகளில் வாழும் பூர்வ குடிகள். குட்டையாகவும், கறுப்பாகவும் சுருள் முடியும், சப்பை மூக்குமாக இருப்பார்கள். வேட்டையாடுவதிலும் மீன் பிடிப்பதிலும் வல்லவர்கள். இந்தோனேஷியர்கள் மங்கோலியர்களின் வழி வந்தவர்கள். ஆகவே, உயரமாகவும் பிரகாசமான நிறத்துடனும் ஒடிய ஒடிய உடலும் வளைந்த மூக்குமாக இருப்பார்கள். வேட்டையாடுவதிலும், மீன் பிடிப்பதிலும், கத்தி வீச்சிலும் வல்லவர்கள். பூமியிலும், மரங்களின் மீதும் வீடு அமைத்து வாழுவார்கள்.

''முகமதிய, இந்திய, ஸ்பானிய, அமெரிக்கப் பண்பாட்டு நாகரிகங்களில்



ஊறியவர்களாதலால் பிலிப்பினோஸ்களுக்குச் சங்கீதம், நாட்டியம் இவைகளில் ரொம்ப ஈடுபாடு'' என்றார் தாத்தா.

அப்போது எருமைகள் சில இவர்களை நோக்கி வந்தன. ''தாத்தா! நம்ம ஊர் எருமை மாடுகள் போலவே இருக்கின்றனவே!'' என்றாள் பட்டு.

''ஆம். இவைகளுக்கு இங்கே காரிபாஸ் (*Caribaos*) என்று பெயர். வயல் வேலைகளுக்கு இவைகள் ரொம்ப உபயோகம். பிலிப்பைன் மக்களின் முக்கிய உணவு. அரிசியும், சோளமும் தான் ஏற்றுமதி கரும்பு, தேங்கா

வெண்ணெய், அபகா (Abaca) என்ற மணிலா சணல், மரங்கள், பதம் செய்த அன்னாசிப் பழங்கள், எம்பிராய்டரி வேலைப்பாடுகள் ஆகியவை.

''கோழிச் சண்டை இவர்களுக்குக் குஷியான பொழுதுபோக்கு. ஜாய் அலாஸ் என்று ஒரு விளையாட்டு. வளைந்த கூடை போன்ற ஒரு மட்டையால் பந்தை வீசி விளையாடுவார்கள். வீசிய பந்தை இந்தக் கூடைக்குள் மறுபடியும் பிடித்து வீசுவார்கள். பார்க்க ரொம்ப 'த்ரில்'லாக இருக்கும்'' என்றார் தாத்தா.

அப்போது அவர்கள் வயல்வெளியைத் தாண்டி வந்து கொண்டிருந்தார்கள். அங்கே முழங் கைகளைக் கட்டியபடி ஒரு சிலை வயலை நோக்கி உட்கார்ந்திருந்தது. ''இது என்ன, காவல்காரனா?'' என்றாள் பட்டு.

''இஃபுகுவா — தானியக் கிடங்குக் கடவுள் இது. சரி சரி... நேரமாகிறது. வா. பரிசளிப்பு விழாவுக்குப் போய் விட்டுப் பிறகு பார்க்க வேண்டியது இங்கு நிறைய இருக்கிறது. நீலக் கடல்-லாகூன் — கரைகளையும், எரிமலைகளையும், வயல்வெளிகளையும் காடுகளையும் கண்டு மகிழப் போது ஏது?'' என்றார். அவர்கள் முன்னால் ஒரு விசித்திரமான பஸ் வந்து நின்றது.

''இதற்கு 'ஜீப்னிஸ்' என்று பெயர். ஜீப் கார்களைப் பஸ்களாக்கிப் போக்குவரத்துக்குப் பயன்படுத்துகிறார்கள். வாருங்கள், ஏறிக் கொள்ளலாம்'' என்று உள்ளே தாவி ஏறினார் தாத்தா. பஸ்ஸில் இருந்தவர்களின் உடை பட்டுவுக்கு விநோதமாக இருந்தது. அழகழகாகச் சட்டைகளில். எம்பிராய்டரி செய்திருந்தது.

'' இ த ற் கு ப் 'பண்டாகலாக்' சட்டைகள் என்று பெயர். நாம் திரும்பும் போது உனக்கு இதுபோன்ற சட்டைகளை வாங்கித் தருகிறேன். இவற்றின் எம்பிராய்டரி வேலை உலகப் புகழ் பெற்றது. இ ன் னொ ன் று ம் சொல்ல மறந்து விட்டேனே, இவர்களுடைய தேசிய மலர் மல்லிகை'' என்றார் தாத்தா.

''அடடே! எம். எஸ். அம்மா பிறந்த ஊரான மதுரையும் மல்லிகைக்குப் பேர் போனதாச்சே'' என்றாள் பட்டு.

''ஆஹா என்ன மணப் பொருத்தம்'' என்றார் தாத்தா.

''தாத்தா மறக்காமல் மாயான் எரிமலைக்குப் போய்விட்டுத்தான் திரும்பணும்'' என்றான் கிட்டு. அவன் கவலை அவனுக்கு.

"கண்ணன் பூனை"



கண்ணன் பூனையைக் காணோமாம்,
கண்டதுண்டா சொல்லுங்கள் !
வெண்ணெய் போல வெளுப்பு நிறம்,
கண்கள் மட்டும் கருநீலம் !

எந்த வீட்டு அடுக்களையில்
என்ன விஷமம் செய்கிறதோ ?
சந்தடியின்றி எலியாரைச்
சந்திக்கத்தான் சென்றதுவோ ?

ஆசை ஆசையாய்ப் பால் திருடி
அவசரமாகப் பருகியதால்
மீசை முடியும் படபடக்க
'மியாவ், மியாவ்' என்றே கத்திடுதோ ?

'பொல்லாப்பூனை இது' என்றே
எல்லாருந்தான் சொன்னாலும்
கண்ணன் பூனையை விடுவானோ,
கணமும் அதனைப் பிரிவானோ ?

ஆர். பி. சாரதி

'மை'யை மறக்காதே!



கவிஞர் சிவல்புரி சிங்காரம்

ஒருமுறை தான்வரும் இளமை — தினம்
உதவிகள் செய்வதுன் கடமை !
வறுமையேயுன் றாயினும் வாய்மை — நீ
வழங்கிடு அதுவே நன்மை !



தரணியில் போற்றிடு தாய்மை — அவர்
தந்திடு மன்பொரு தூய்மை !
வருகின்ற வாழ்வினில் வளமை — நீ
வருத்தபின் ஒழித்திடு தீமை !

பழங்களை உண்பது குளுமை — உனைப்
பார்த்திடு மோஅந்த முதுமை !
நலமுட னிருப்பது அருமை — அதை
நாடிட நாடிடு தனிமை !

மழலையின் மனமோ மென்மை — அதை
மதியாதிருப்பது புன்மை !
உளத்தினில் வேண்டும் பொறுமை—தினம்
உண்மையை உரைப்பது பெருமை !

பொய்களைக் கூறுதல் சிறுமை — பல
புரட்சிக ளோடுசெய் புதுமை — இந்த
'மை'களை மறப்பது மடமை — நீ
மறந்தால் விளையும் கொடுமை !




சீதாதேவி தன் உயிரை மாய்த்துக் கொள்ள முற்படுவதைக் கண்ட ஹனுமார் தவித்துப் போனார்.
அன்னையை எப்படியும் காப்பாற்றவேணும். அவர் என்னை நம்ப மாட்டார். அரக்கனின் மாயவேலை என்று கருதுவார்.
இராமபிரானின் சரித்திரத்தைத் தமது இனிய குரலில் பக்தியோடு கூறியபடி சீதையின் அருகே ஒரு கிளைக்கு வருகிறார் ஹனுமா
ஜெய் ஹனுமான் 20
கதை: ரா. கணபதி
சித்திரம்: வினு
பகைவனின் ஊரில் என் பிரபுவின் கதையை இப்படி மனம் கசிந்து சொல்வது யார்?
மெய்யாகவே என் பிரபு ஒரு தூதுவனை அனுப்பி இருப்பாரா? இது கனவோ? கனவாக இருக்காது. நான் உறங்கியே பல காலமாயிற்றே.
தேவி! நான் ராம தூதன். தங்களுக்காக அண்ணல் தவித்துக் கொண்டிருக்கிறார். விரைவில் உங்களை மீட்க வருவார்.


சீதைக்கு ஹனுமனின் பேச்சில் நம்பிக்கை ஏற்படவில்லை. அவரை அசுர மாயை என்று எண்ணி மௌனமாக நின்றாள்.
தாயே! தாங்கள் நினைப்பது போல நான் மாயையல்ல. சுக்ரீவனின் மந்திரி நான். என் பெயர் ஹனுமான்.
சீதை பிரிந்ததிலிருந்து அன்றுவரை நடந்தவைகளை ஹனுமார் கூறினார் சீதையிடம்.
தேவி! தங்கள் ஐயத்தைத் தீர்க்கவே ஐயன் தமது முத்திரை மோதிரத்தைக் கொடுத்திருக்கிறார், இதோ...
மாருதி இந்தப் பேருதவி செய்த உனக்கு நான் என்ன கைம்மாறு செய்வேன்?
தேவி, தாங்கள் இங்கும், ஐயன் அங்கும் தவிக்கும் இந்த நிலையை என்னால் தாங்க முடியவில்லை. இப்போதே உங்களை என் முதுகில் சுமந்து கொண்டு ராம பிரானிடம் சேர்ப்பித்து விடுகிறேன். ஏற்றுக் கொள்ளுங்கள்.
இந்த அரக்கிகளின் அச்சுறுத்தலுக்கும் இராவணனின் கொடுமைக்கும் ஆளாக இனி ஒரு கணமும் தங்களை இங்கு விட்டு வைக்க மாட்டேன்.
இந்தச் சின்னக் குரங்கினால் அது அசாத்தியமா என்று ஐயுற வேண்டாம். இதோ என்னுடைய சுய உருவத்தைப் பாருங்கள்.
தொடரும்

விருந்துக்கு வந்திருந்தவர்கள் ஒவ்வொருவராகக் கிளம்பிக் கொண்டிருந்தார்கள். போகும்போதுகூட அவர்கள் பேச்சும் பார்வையும் கீர்த்தி வர்மனைச் சுற்றியே இருந்தன. மாணிக்க வர்மரின் முகத்தில் மகிழ்ச்சி இல்லை. தன் சகோதரியின் செல்வ மகள் குந்தளவல்லியும் இளவரசன் கீர்த்தியும் இணைந்து அமர்ந்திருந்த காட்சி அவர் கண்களுக்கு விருந்தாக இருந்தது. ஆனால் மகாராஜாவின் அறிக்கையை நினைத்தபோது அவர் உள்ளமும் உடலும் நடுங்கின.

விசித்திரபுரி மன்னர் மந்தஹாசரிடமிருந்து ஒரு விசேஷத் தூதுவன் அவசரமான சுற்றறிக்கையோடு ஓடோடி வந்திருந்தான். மாணிக்க வர்மரிடம் அது பற்றிய மகாராஜாவின் கடிதத்தைக் கொடுத்துவிட்டு மங்களகிரி வீரர்களின் உதவியுடன் மன்னர் பிரானின் அறிக்கையை நகரின் நாற்சந்திகள், முச்சந்திகள், அங்காடி, பிரதான ராஜபாட்டை எங்கிலும் தானே இருந்து ஒட்டிவிட்டுப் போயிருந்தான். நகரில் எங்கும் எல்லாரும் அதைப் பற்றியே பேசிக் கொண்டிருந்தார்கள். மாணிக்க வர்மரின் முகத்தில் கவலை இருள் படிந்திருந்ததற்கும் மகாராஜாவின் அந்த அறிக்கைதான் காரணம்.

மாணிக்க வர்மர் மறுபடியும் கீர்த்தியின் பக்கம் திரும்பிப் பார்த்தார். களங்கமில்லாத, கவலையில்லாதவனாக எதைப் பற்றியோ குந்தளவல்லியிடம் பேசிக் கொண்டிருந்தான். அவன் பேச்சைக் கேட்டு முத்து உதிர்வது போல மோகனமாகச் சிரித்துக் கொண்டிருந்தாள் குந்தளவல்லி.

'இளவரசருக்கு மகாராஜாவின் அவசர அறிக்கை பற்றி எதுவும் தெரியாதோ. தெரிந்திருந்தால் இத்தனை தெளிவோடு உரையாடிக் கொண்டிருக்க மாட்டாரே' என்ற எண்ணம் முதன் முதலாகத் தோன்றியது மாணிக்கவர்மருக்கு. காதலர்களின் அருகில் சென்றார். இளவரசன் கீர்த்தியிடம் ''இளவரசே! கொஞ்சம் என்னோடு வருகிறீர்களா? ஒரு முக்கியமான விஷயம்'' என்றார். பிறகு குந்தளாவின் பக்கம் திரும்பி, ''குந்தளா! உன் அம்மா ரொம்ப நேரமாக உன்னை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறாள். அந்தப்புரத்துக்குப் போ'' என்று அவளை அனுப்பினார். பிறகு கீர்த்தியை அழைத்துக் கொண்டு கூடிப் பேசிக் கொண்டிருக்




கும் விருந்தினர்களின் சூழலிலிருந்து சற்று ஒதுக்குப்புறமான இடத்துக்கு அழைத்துப் போனார். சிங்காரித்துப் பொட்டிட்டுக் கொள்ளும் ஓர் அற்புதமான கலையழகுள்ள சிலையருகே போய் நின்றார். பார்ப்பவர்களுக்கு இளவரசனும் மாணிக்க வர்மரும் அந்தச் சிலையின் அற்புத எழில் பற்றிப் பேசுவதாகத் தோன்றியது.

''இளவரசே! தங்களைச் சூழ்ந்துள்ள அபாயம் பற்றி ஏதுமே தெரியாதா உங்களுக்கு?'' என்றார்.

''அபாயமா? இன்னுமா?'' என்று கேட்டான் கீர்த்தி. அவன் உள்ளத்தில், 'அக்கினி அரக்கனைத்தான் கொன்று விட்டோமே; இன்னும் எந்த அபாயம்?' என்ற வினவே மேலோங்கி நின்றது. மாணிக்க வர்மருக்கோ கீர்த்தி அக்கினி அரக்கனோடு போரிட்டு அதைக் கொன்றது தெரியாது. ஆகவே ''அபாயம்தான் இளவரசே!'' அவர் தொய்ந்த தலையோடு துவண்ட குரலில் ''இதோ இந்த இரு அறிக்கைகளையும் பாருங்கள்''

மந்திரக் கம்பளம் 12

வாண்டு மாமா



என்று கூறியபடி தமது மேலங்கியின் உள் பையில் வைத்திருந்த இரு சுற்றறிக்கைகளையும் எடுத்துக் கீர்த்தியிடம் கொடுத்தார். ''இவ்விரு அறிவிப்புக்களும் இந்த நாட்டின் மூலை முடுக்கெல்லாம் ஒட்டப்பட்டுள்ளன. ஆனால் உங்கள் கண்ணில் படவில்லை போலும்.''

ஊருக்குள்ளோ நாடு நகரத்திலோ நடந்தோ அல்லது குதிரை மீதோ வந்திருந்தாலல்லவா அவனுக்கு நாட்டு நடப்புத் தெரிந்திருக்கும். அவன்தான் மந்திரக் கம்பளத்திலும் மாயப் பாதரட்சையிலும் பவனி வருகிறானே! நிதானமாக மாணிக்க வர்மர் கொடுத்த அறிக்கையைப் பார்த்தான். முதல் அறிக்கை பேசியது, மகாராஜா மந்த ஹாஸரின் குரலாக:

இதனால் எனது சகல விதமான பிரஜைகளுக்கும் அறிவிப்பது என்னவென்றால் — என்னுடைய மூத்த மைந்தன் கீர்த்தி வர்மன் மன்னிக்க முடியாத பல குற்றங்களைச் செய்து இந்நாட்டில் குழப்பத்தை விளைவித்ததற்காக நான் அவனை நாடு கடத்தி விட்டேன்.

குற்றங்கள்: ஒன்று — விசித்திரபுரி நாட்டை நாசத்துக்கு இழுத்துக் கொண்டு போகும் பயங்கர அக்கினி அரக்கனை அழிக்க

மறுத்தது. இவன் செய்ய வேண்டிய பணியில் இவனது சகோதரர்களை ஏவி விட்டு அவர்கள் உயிரை இழக்கச் செய்தது.

இரண்டு—மன்னர் மகளுக்குக் கௌரவ மாகப் பழகாதது. மங்களகிரி மக்க ளிடையே கிலியையும் குழப்பத்தையும் ஏற்படுத்தும் வகையில் கேவலமாக நடந்து கொண்டது.

மூன்று — விசுவாசமிக்க இந்த நாட்டு மக்களின் மனத்திலே விரோதத்தை யும் புரட்சியையும் உண்டாக்கும் வித மாக நடந்து கொண்டு எனக்கு எதி ராகச் செயல்படுவது.

ஆகிய குற்றங்களுக்காக கீர்த்தி வர் மன் நாடு கடத்தப்படுகிறான். புரட்சிக் காரனை அவனுக்கு யாராவது எந்த வகையிலாவது உதவினாலோ, ஆதரித் தாலோ, அவனோடு நட்புக் கொண் டாலோ அவர்களும் துரோகிகளாகக் கருதித் தண்டிக்கப்படுவார்கள்.

தலைமறைவாகித் திரியும் நாடு கடத் தப்பட்டிருக்கும் இளவரசனை உயிரோடு கொண்டு வந்து ஒப்புவிப்பவர்களுக்குப் பத்தாயிரம் பொற்காசுகள் பரிசளிக்கப் படும். இப்படிக்கு

மந்தஹாச மகாராஜா
விசித்திரபுரி

அடுத்த அறிக்கையைப் பார்த்தான் கீர்த்தி.


நமது நாட்டின் எல்லையில் இருந்து கொண்டு பல இன்னல்களைச் செய்து வருகிறது கொடிய மிருகமான அக்கினி அரக்கன். அதன் அட்டகாசத்தினால் விசித்திரபுரியில் பஞ்சமும் பட்டினியும் தவிரப் பல கஷ்டங்களையும் மக்களாகிய நீங்கள் அனுபவித்து வருகிறீர்கள்.

ஆகவே—

குடிமக்களில் யார் ஒருவர் அந்தக் கொடிய மிருகத்தைக் கொன்று அதன் கொம்புகளையும் வாலையும் அதன் அடை யாளமாகக் கொண்டு வருகிறார்களோ அவர்களுக்குப் பத்தாயிரம் பொற்காசு களும் விசித்திரபுரியின் இளவரசுப் பட் டமும் அரச குடும்பத்து அழகியான மஞ்சுளாவின் கணவனாகும் பாக்கிய மும் காத்திருக்கின்றன. இப்படிக்கு

மந்தஹாச மகாராஜா
விசித்திரபுரி

அறிக்கைகளைப் படித்த கீர்த்தியின் முகத்தில் எவ்விதமான மாற்றமும் ஏற் படவில்லை. ''ம்...'' என்றதோர் பெரு மூச்சுடன் அந்த அறிக்கைகளை மடித்து மாணிக்க வர்மனிடம் நீட்டியபடியே, ''என் அப்பா இத்தனை அழகாக அறிக் கைகளைத் தயார் செய்திருக்கிறாரே என்று



எனக்கே வியப்பாக இருக்கிறது. சரி, நாம் விருந்தாளிகளுடன் கலந்து கொள்ளப் போவோமா?'' என்று கேட்டான் சர்வ சாதாரணமாக.

''இளவரசே!'' என்றார் மாணிக்க வர்மர். அவர் குரலில் பீதி கப்பி நின்றது. ''மங்களகிரியின் தெருவெல்லாம் மகாராஜாவின் வீரர்கள் நின்று கொண்டிருக்கிறார்கள். அவர்களின் பார்வையிலிருந்து தப்பி நீங்கள் எப்படி இங்கு வந்தீர்கள் என்று நாங்கள் வியந்து கொண்டிருக்கிறோம்: இந்த அரண்மனையில் இப்போதைக்கு நீங்கள் பத்திரமாக இருக்கிறீர்கள். ஆனால் இதுவும் கூட — அதாவது மன்னிக்க வேண்டும் இளவரசே. தங்களை நான் என் பாதுகாப்பில் அதிக காலம் வைத்திருக்க முடியாதே. விசித்திரபுரி மன்னரின் விரோதியாவதை நான் விரும்பவில்லை. அதே சமயம் உங்களைப் புறக்கணிக்கவும் என்னால் முடியவில்லை...'' என்றார் சிற்றரசரான மாணிக்க வர்மர்.


''மகாராஜாவுக்கு எதிராகப் புரட்சிக் கொடி உயர்த்தவோ போராடவோ வேண்டியதில்லை என்று நினைக்கிறேன். உங்கள் அபிப்பிராயம் என்ன?'' என்று கேட்டான் கீர்த்தி, முகத்தில் மாறாத அதே முறுவலுடன்.

''அப்படியானால் மகாராஜாவின் இந்த அறிக்கைகளைப் பற்றித் தங்கள் முடிவு என்ன?''

''இருபதாயிரம் பொற்காசுகளையும் பரிசாகப் பெற்றுக் கொள்ளுவோம். இருபது ஆயிரம் என்பது சாதாரணத் தொகையா என்ன? அறிக்கையில் குறிப்பிட்டுள்ள இளவரசன் இன்றிரவே உயிருடன் மகாராஜாவின் முன்னால் ஆஜராவான்! அது மட்டுமல்ல. அவர் இரண்டாவது அறிக்கையின்படி அக்கினி அரக்கனின் கொம்புகளும் வாலும் அவர் முன் சமர்ப்பிக்கப்படும்! ஆனால் அந்த இளவரசன் தன் மாமன் மகளான மஞ்சுளாவை மட்டும் மணக்க விரும்ப மாட்டான்!''

கீர்த்தியின் வார்த்தைகள் மாணிக்க வர்மரின் விழிகளை விசாலமாக்கிய அதே சமயத்தில் ஒரு சந்தேகமும் புகையாக வந்து சூழ்ந்துகொண்டது.

''ஆனால் இளவரசே! மகாராஜாவின் இருப்பிடம் இங்கிருந்து முந்நூறு மைல்களுக்கப்பால் உள்ளதே. இன்றிரவே நீங்கள் எப்படி...? அதுவுமன்னியில் என் அரண்மனைப் பிரதான சமையல்காரனை நள சர்மா திடீரென்று விருந்து ஆரம்பமாவதற்கு முன்பு மாயமாக மறைந்து போயிருக்



கிறான். அவன் மறைவு எனக்குக் கவலையையும் பயத்தையும் தருகிறது. தாங்கள் இங்கு இருப்பதாக மகாராஜாவின் பிரதான தளபதிக்குத் தகவல் தருவதற்காகப் போய் விட்டானோ என்று சந்தேகிக்கிறேன்'' என்றார் மாணிக்க வர்மர்.

''நீங்கள் கவலையோ கலக்கமோ அடைய வேண்டாம். எத்தகைய சிக்கலான சூழ்நிலையையும் என்னால் சமாளிக்க முடியும். அரசரின் அறிக்கைகளை மறந்து விடுங்கள். அதை விட முக்கியமான ஒரு காரியம் இருக்கிறது. குந்தளவல்லிக்கு நான் ஒரு பரிசு அளிப்பதாக வாக்களித்திருந்தேன். அதைக் கொண்டு வந்திருக்கிறேன். என்ன பரிசுப் பொருள் என்று கேட்கிறீர்களா? வேறொன்றுமில்லை. அக்கினி அரக்கனின் கொம்புகளும் வாலும்தான்! குந்தளவல்லியை அழைத்து வாருங்கள். அவள் கண்கள் என் பரிசுப் பொருள்களைக் கண்டு மின்னிச் சிரிப்பதை நான் காணவேண்டும்'' என்றான் கீர்த்தி.

மாணிக்க வர்மருக்கு மூச்சு நின்று விட்டது போலிருந்தது. 'அக்கினி அரக்கனின் கொம்பும் வாலுமா?' அவருக்குப் பேச முடியவில்லை. அதிசயத்திலும் அதிசயமாக இருக்கிறதே. இத்தனை வீரரான, பராக்கிரமசாலியான, அழகான இளவரசரையா மகாராஜா நாடு கடத்தி யிருக்கிறார்?' மாணிக்க வர்மருக்குக் கையும் ஓடவில்லை காலும் ஓடவில்லை. பைத்தியக்காரரைப் போல் 'குந்தளா, குந்தளா!' என்று கூவிக் கொண்டே அந்தப்புரத்துக்கு ஓடினார், அவளைக் கையோடு அழைத்து வர. பணியாளர்களிடம் கூறிக் கூட்டி வரச் சொல்ல வேண்டும் என்பதையும் மறந்து விட்டார். அத்தனை பரவசம், பதற்றம், மகிழ்ச்சி, வியப்பு!

'' குந்தளா.... குந்தளா....! ஓடி வாயேன்! உனக்கு இளவரசர் என்ன கொண்டு வந்திருக்கிறார் என்று வந்து பாரேன்...'' என்று கூவிக்கொண்டே ஓடிவரும் மாணிக்க வர்மரைக் கண்டு குந்தளவல்லி மனோகரமாகச் சிரித்துக் கொண்டே அவர் கையைப் பற்றிய படி அமைதியாக விருந்து மண்டபத்தை நோக்கி நடந்தாள். கீர்த்தி அவளுக்காகக் கொண்டு வந்துள்ள பரிசுப் பொருளைப் பற்றி அவளிடம் அவன் சொல்லா விட்டாலும் அது என்னவாக இருக்கும் என்பதை ஊகித்துக் கொண்டு விட்டாள் அவள்.

''இளவரசே, இதோ குந்தளா...! எங்கே உங்கள் பரிசுப் பொருளைக் காட்டுங்கள்!'' என்று பரபரத்தார் மாணிக்க வர்மர். கீர்த்திக்கு அவர் தவிப்பு தமாஷாக இருந்தது. முகமெல்லாம் சிரிப்பாக மௌனமாக' மோகனமாக நின்று கொண்டிருக்கும் குந்தளவல்லியின் கரங்களைப் பற்றிய படி அவளை அந்த விருந்துக் கூடத்திலிருந்து வெளியே அழைத்துப் போனான். மாணிக்க வர்மரும் அவர்களைப் பின்தொடர்ந்து போனார். மந்திரக் கம்பளத்தையும் அக்கினி அரக்கனின் தலை வால் அடங்கிய பட்டுத் துணி மூட்டையையும் வைத்த இடத்துக்கு வந்ததும் கீர்த்தியின் மந்தஹாசமான முகம் வெளுத்தது. அவன் தலை சுற்றுவது போலிருந்தது.

அவைகளை அங்கு காணவில்லை! எத்தனை பெரிய அதிர்ச்சி, அவமானம்! ஒருசில விநாடிகள் யாருமே பேசவில்லை. கீர்த்தியின் வெளுத்த முகம் மாணிக்கரிடம் கிலியை ஏற்படுத்தியது. குந்தளவல்லியோ ஏதோ விபரீதம் நடந்து விட்டதென்று ஊகித்துக்கொண்டாள்.

அந்த நிலையிலும் கீர்த்தி தன்னைச் சமாளித்துக் கொண்டு பேசினான்: ''ஐயா, தங்கள் அரண்மனைப் பணியாளர்களை அழையுங்கள். முஸ்லிம்கள் தங்கள் தொழுகைக்காகக் கீழே விரித்துக்கொள்ளும் கம்பளம் போன்றதும், வேலைப்பாடு மிக்கதுமான ஒரு ரத்தினக் கம்பளத்தையும் பட்டுத் துணி மூட்டையையும் இங்கு பார்த்தார்களா என்று விசாரியுங்கள்'' என்றான்.

மாணிக்க வர்மர் கைதட்டிக் குரல் கொடுத்தார். அரண்மனைப் பணியாளர் அத்தனை பேர்களையும் அங்கு வந்து கூடும்படி ஆணையிட்டார். அவர்களுள் உதவி சமையல்காரர்களும் பரிசாரகர்களும் இருந்தார்கள். அவர்களிடம் கீர்த்தி விவரித்தபடி அங்கு மறைத்து வைக்கப்பட்டிருந்த பொருள்களைப்பற்றிக் கேட்டார் மாணிக்க வர்மர். யாராலும் அதற்கு விடை கூற முடியவில்லை கொஞ்ச நேரம். பிறகு உதவிச் சமையற்காரன் தயங்கியபடி முன்வந்து, ''அரசே, நீங்கள் குறிப்பிடும் பொருள்களை நளசர்மாதான் தன்னுடன் எடுத்துப் போனார்'' என்றான்.

''நள சர்மா எங்கே போனான்?''

''தெரியவில்லையே. இப்படி ஒரு சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துத்தான் இங்கு இத்தனை நாட்கள் இருந்தான் போலிருக்கிறது'' என்றான் உதவி சமையற்காரன்.

''சந்தர்ப்பத்தை எதிர்பார்த்தா?'' கிரீச்சிட்டது மாணிக்க வர்மரின் கோபக் குரல்.

''ஆம்...'' என்றான் அவன். அங்கு மறுபடியும் பயங்கர அமைதி நிலவியது.

(தொடரும்



விமரிசனத்துக்கு ஓர் அமெரிக்கா

"அமெரிக்கர்கள், வெளிநாட்டவர்கள் தங்களைப் பெரிதும் விரும்புவதையே விரும்புகிறார்கள்-தற்செயலாக வந்த ஓர் அந்நியர் மீது ஒரு பெரிய சடை நாய் பாய்வது போல. ஆசையோடும், ஆத்திரத்தோடும் அது பாயும். ஒரு விநாடியில் உங்கள் மார்பு மீது தாவி ஏறும். யானைக் கனம்! எல்லாம், நீங்கள் அதைக் கொஞ்ச வேண்டுமென்பதற்காகத்தான். இது முற்றிலும் அவர்கள் இயல்பு.

- ஒரு நைஜீரியக் கவிஞர்

"அமெரிக்காவில் ஒரு வாழ்க்கை முறை வளர்ந்துள்ளது; வாய்க்கு ருசியாகத் தின்பது, பொருள் திரட்டிக் குவிப்பது தவிர அது வேறு குறிக்கோள் அற்றது. இலாபம் குவிப்பதற்காக அமெரிக்கர்கள் ஓய்வு ஒழிச்சலின்றிச் சண்டை போடுகிறார்கள்; தங்கள் ஆற்றல்களையெல்லாம் செலவிடுகிறார்கள்; வேறு எதிலும் அவர்களுக்கு நாட்டம் கிடையாது."

- ஒரு நார்வே நாவலாசிரியர்

"அமெரிக்காவின் இளமை அவர்களது பழைமையான மரபு. இன்று முந்நூறு ஆண்டுகளாக இம் மரபு விளங்கி வந்துள்ளது." - ஆஸ்கார்டு ஒயில்டு

"அமெரிக்க இளமைப் பண்புடையது; மேற்கத்திய நாகரிகத்தின் சிறப்புக்கள் அனைத்தும் இறுதியில் அங்கு இடம் பெறும்." - ரவீந்திரநாத் தாகூர்

"இந்த நாட்டில் மக்களுக்காகவே அரசு, அரசுக்காக மக்கள் அல்ல ... அங்கு ஆட்சி முறை கொடுமையாகவும், நீதியற்றதாகவும், திறமையற்றதாகவும், ஊதாரித்தனமாகவும் பல முறை இருந்ததுண்டு. ஆனால் மக்கள் வாழ்வில் அது குறுக்கிடுவதில்லை." - ஜான் பிரெய்ன்

"அமெரிக்கர்கள் தங்களைப் பற்றிய அனைத்தையும் வெளியில் சொல்கிறார்கள். தம் நாட்டைப் பற்றிய குற்றங்கள் பற்றிய புள்ளி விவரங்கள், சிறார்களிடமுள்ள தீயசெயல்கள் பற்றிய அறிக்கைகள், ஒழுக்கக் கேடுகள், இன வேற்றுமைகள் பற்றிய முழு விவரங்கள் — இப்படிப் பலப் பல. மற்றவர்கள் இவற்றை மூடி மறைப்பார்கள். அமெரிக்காவின் குறைகள் பற்றிய தகவல்கள் அறிய ஒருவர் மற்ற நாட்டுத் துறைகளை நாடி அலைய வேண்டியதில்லை. ஏனெனில், அவற்றை அமெரிக்கர்களே தெரிவிக்கின்றனர்."



- ஸ்பெயின் நாட்டு நூலாசிரியர் ஒருவர்

"அமெரிக்கர்கள் அருஞ் செயல்கள் புரியும் அற்புத உணர்ச்சியும், தன்னம்பிக்கையும் உடையவர்கள். திறந்த மனமுள்ளவர்கள்; தாராளம் மிக்கவர்கள்."

- டாக்டர் எஸ். ராதாகிருஷ்ணன்

"நியூயார்க் வாழ்க்கை எனக்குப் பிடிக்கவில்லை. செடி, கொடியே இல்லை. அங்கு கல்லுக்குக்கூட நோய் வந்துவிடும்."

- நிக்கிதா குருஷேவ்

"150 முதல் 200 ஆண்டு காலத்துக்குள் அமெரிக்கா போன்ற ஒரு நாடு அடைந்துள்ள முன்னேற்றத்தில் ஏதோ ஒரு வலிமை இருக்க வேண்டும் என்பது உறுதி. உலகில் முன்னணி நாடாக அமெரிக்கா விளங்குமாறு செய்துள்ள இந்த மாபெரும் முன்னேற்ற வரலாற்றிலிருந்து நாம் கற்க வேண்டிய படிப்பினை உண்டு.."

- ஜவாஹர்லால் நேரு

"அமெரிக்காவில் அறிவாளிகளுக்கு என்று ஒரு புகலிடம் இருந்தால் அது காலியாகவே இருக்கும்."

- ஜார்ஜ் பெர்னார்டு ஷா

"அமெரிக்க மகளிர்! என் ஆழ்ந்த நன்றியை உங்கட்குத் தெரிவிப்பதற்கு நூறு பிறவிகள்கூடப் போதமாட்டா. மைப் புட்டியாக இந்தியப் பெருங்கடலும், பேனாவாக இமயத்தின் உயர் சிகரமும், எழுதுதாளாக நிலவுலகமும், எழுத்தராகக் காலமும் இருப்பினும் என் நன்றியை அவை உங்கட்குத் தெரிவிக்க மாட்டா."

- சுவாமி விவேகானந்தர்

நன்றி: ஸ்பான்தாஸாஜி - 1974



தெரியுமா ?

1347. Mag say say - என்ற பெயரின் சரியான உச்சரிப்பு என்ன ?

1348. சென்ற இதழ் கோகுலத்தில் ஃபிலிப்பைன்ஸ் நாட்டின் பிரபலமான பரிசு பெற்ற இந்தியர்களின் பெயர்களில் ஒரு பெயர் விட்டுப் போயிருக்கிறது. அவர் யார் ?

1349. Rendezvous என்ற வார்த்தையின் சரியான உச்சரிப்பு என்ன ? பொருள் என்ன ?

1350. இயற்கையில் கிடைக்கும் மிக கனமான ஓர் உலோகம் அணு சக்தி உற்பத்தியில் பெரும் பங்கு வகிக்கிறது. அதன் பெயர் என்ன?

1351. மால்டா தீவின் தலைநகர் எது

1352. டாஸ்மேனியாத் தீவின் முந்தையப் பெயர் ஒன்று உண்டு. அது என்ன?

1353. கொடியாகப் படரும் ஒரு மூலிகை. ஐஸ் கிரீம், சாக்கலேட், இனிப்பு, பானங்களுக்கு மணம் ஊட்டும் ஒரு வகை எஸன்ஸ் தயாராகிறது இதிலிருந்து. இந்தத் தாவரத்தின் பெயர் என்ன ?

1354. ரோமானிய இதிகாசத்தில் காதல் கடவுளின் பெயர் என்ன தெரியுமா ?

1355. கங்காருவில் சிறியதாக ஓர் இனம் ஆஸ்திரேலியாவில் உள்ளது. இதற்கு என்ன பெயர் ?

1356. நியூயார்க் நகரில் ஒரு தெரு. பங்கு மார்க்கெட்டுக்குப் புகழ்பெற்றது. இதன் பெயர் என்ன?

1357. இங்கிலாந்தின் முதல் பிரதம மந்திரி யார் தெரியுமா ?

1358. போலந்தின் தலைநகரம் எது?

1359. நியூஸிலாந்தின் தலைநகரம் எது தெரியுமா ?

1360. போர் வீரர்களைத் தயாரிக்கும் ஒரு நிறுவனத்தை 1892ல் அமெரிக்காவில் உருவாக்கினார்கள். இதற்கு அமெரிக்க ராணுவ அகாதமி என்று பெயர். அது எந்த இடத்தில் இருக்கிறது தெரியுமா ?

1361. சரித்திரக் காலத்துக்கு முற்பட்ட ராட்சத பிராணிகளை ஒத்த ஜீவராசிகளையும் டிராகன் என்ற ராட்சத மிருகங்களின் வழித் தோன்றலையும் இன்றைக்கும் ஒரு தீவில் காணலாம். அது எங்கே என்று கூற முடியுமா ?

1362. கனக்டிக்கட் மாகாணத்தின் ஹார்ட் ஃபோர்டு என்னுமிடத்தில் அமெரிக்க நாட்டின் புகழ்பெற்ற சர்வ கலாசாலைகளுள் ஒன்று உள்ளது. அதன் பெயர் தெரியுமா ?

1363. ஆகாயக் கப்பல் (Air Ships) நிர்மாணித்துப் புகழ் பெற்றார் ஒரு ஜெர்மானியர். அவர் யார் தெரியுமா ?

1364. பயாலஜி என்ற பாடத்தின் ஒரு பகுதியாக மிருகங்களின் உடல் அமைப்பு, வாழ்க்கை முறை பழக்கங்களை விளக்கும் ஒரு பகுதி உண்டு. இதற்கு என்ன பெயர்?

1365. ஸைக்ளோன் என்பது மேலை நாட்டு இதிகாசங்களில் வர்ணிக்கப்படும் நெற்றியில் மட்டும் ஒரே ஒரு கண்ணுடைய ஒரு ராட்சதன். இது சரியா, தவறா ?

1366. சிலந்திக்கு ஆறு கால்கள். சரியா, தவறா ?

1367. மிடாஸ் என்று ஓர் அரசன் பேராசையால் கிடைத்த ஒரு வரத்தினால் இவன் தொட்டதெல்லாம் பொன் ஆயிற்று. இந்தக் கதை தெரியுமல்லவா உங்களுக்கு ?

1370. வின்ஸ்டன் சர்ச்சில், ஆப்ரகாம் லிங்கன், பெஞ்சமின் டிஸ்ரேலி, தாமஸ் ஜெபர்சன் — இவர்களின் தொழில் என்ன என்று சொல்ல முடியுமா ?

தெரியுமே!

விடை: 1347. மாக் ஸெ ஸ்ஸாய் என்று உச்சரிக்க வேண்டும். 1348. அன்னைதெரிஸா. 1349. ரெண்டேவூ - ஒரு குறிப்பிட்ட இடத்தில் குறிப்பிட்ட நேரத்தில் ஒரு குழுவினர் அல்லது போர்ப்படைகள் சந்திப்பது என்று பொருள். 1350. யுரேனியம். 1351. வாலெட்டா (Valletta). 1352. வான்டிமன்ஸ் லாண்ட் (Vandimans Land). 1353. வனில்லா (Vanilla). 1354. வீனஸ். 1355. வாலபி. 1356. வால்ஸ்ட்ரீட். 1357. ராபர்ட் வால்போல். 1358. வார்ஸா. 1359. வெலிங்டன். 1360. வெஸ்ட் பாயின்ட் என்ற இடத்தில். 1361. இந்தோனேஷியாவிலுள்ள கொமோடோ தீவில் (Komodo island). 1362. ஏல் சர்வகலாசாலை. 1363. கவுண்ட ஃபெர்டினான்டு ஜெப்பெலின். 1364. ஜுவாலஜி Zoology. 1365. தவறு. காற்றின் அழுத்தத்தினால் ஏற்படும் ஒரு வகை புயலுக்குத்தான் இப்பெயர். 1366. தவறு: எட்டுக் கால்கள், 1367. கதை தெரியும். ஆனால் அந்த அரசன் பெயர் மிதாஸ் (Midas). 1370. இவர்கள் எல்லோரும் அரசியல் தலைவர்கள்.

'கோகுல'த்தில் வெளியாகும் கதைகளில் காணப்படும் பெயர்கள், சம்பவங்கள் யாவும் கற்பனையே ● சென்னை, சேத்துப்பட்டு 'கல்கி' அச்சகத்தில், பாரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்துக்காக வி. வைத்தியநாதன் அச்சிட்டு வி. முரளியால் வெளியிடப்பட்டது ● ஆசிரியர்: கே. ஆர். ஆத்மநாதன்

வாழ்க்கை ஒரு கண்டுபிடிப்பு



'க்ளிக்' அடித்துவைப்பீர் - நீங்காத நினைவுக்கே

விலை
ரூ. 70.25
(எக்சைஸ் தீர்வை உள்ளிட்டது. இதர வரிகள் தனி).

எப்போதுமே உங்கள் கையோடிருக்கட்டும், தப்பாதத் துணையான க்ளிக் III. மின்னலெனத் தோன்றி மறையும், வாழ்வின் அந்த மகோன்னதமான கணங்களைப் பிடித்துக் காத்திடுவீர், என்றென்றும் நீங்காத நினைவுக்கே. 'குறிவைத்ததும் கப்பென' தப்பாமலே எடுப்பதற்கு ஏற்றது ஆக்பா க்ளிக். நடைமுறைக்குகந்தது. உள்ளது உள்ளபடியே எடுப்பது, கையாளச் சுலபமானது. சிக்கனமானது.

■ 120 பிலிம் ரோல் ஒவ்வொன்றுக்கும் 12 பெரிய (6 × 6 செமீ.) படங்களைப் பெறுவீர்கள்.

■ சிறந்த தயார்த் தோலுறை, போர்ட்ரெய்ட் லென்ஸ், ஆகியவை தனியாக விலைக்குக் கிடைக்கும்.

துல்லியமான பிரிண்டுகளையும், என்லார்ஜ்மெண்டுகளையும் பெறுவதற்கே ஆக்பா-கேவார்ட் போட்டோ தாள்களையே வற்புறுத்திப் பெறுங்கள். அனுமதிபெற்ற எல்லா ஆக்பா-விற்பனையாளர்களிடமும் கிடைக்கும். ஆக்பா-கேவார்ட் ஏ. ஜி. லீவர்குஸன் அவர்களின் கூட்டுறவோடு தயாரிப்போர்: நி நியூ இந்தியா இண்டஸ்ட்ரீஸ் லிட்.



ஆக்பா க்ளிக்
இந்தியாவின் மிகப் பிரபலமான காமிரா.

ஏகபோக வினியோகஸ்தர்கள்:
ஆக்பா-கேவார்ட் இந்தியா லிமிடெட்.,
பம்பாய் · புது டெல்லி · கலகத்தா · சென்னை
புகைப்பட சாதனங்களின் தயாரிப்பாளர்களான ஆக்பா-கேவார்ட் ஆண்ட்வெர்ப்/லீவர்குஸன் அவர்களின் ரெஜிஸ்டர்டு டிரேட் மார்க்.



